ருஷாந்தன் பெனடிக்
ஓசான்னா இவாஞ்சலின்



# மணவாளன்

... இதோ, மணவாளன் வருகிறார்,
அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனவாளன்

ருஷாந்தன் பெனடிக்
ஒசான்னா இவாஞ்சலின்

கிழக்கிலங்கை சுவிசேஷ பணி, மட்டக்களப்பு, இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

**புகைப்படம்**
லக்மல் சிங்கராஹே (Lakmal Sinharage Photography), கண்டி

**அட்டைப்படம்**
சகோ. புஷ்பராஜ் (Arts for Christ Ministry) இந்தியா

**ஆடைகள்**
சகோதரி. இவோன் ஜெய்ராம், மட்டக்களப்பு
சகோதரி. தர்ஷினி சிவசம்பூ, மட்டக்களப்பு

**ஆலோசனை**
ஆசிரியர். யோசுவா போல், இலங்கை

**அச்சகம்**
சகோ. விஜய், ஜெஸ்லியா பிரிண்டர்ஸ், ஆரையம்பதி

**தோழிகள்**
சகோதரி. கிறிஸ்டினா சிவசம்பூ
சகோதரி. ஸ்டெல்லா குருபரன்
சகோதரி. கிபியா சங்கர்
சகோதரி. துஷ்யந்தி தேவகுணரெட்ணம்

**ஒப்புமை நோக்கியவர்கள்**
சகோ. சீலன், மட்டக்களப்பு
சகோ. ஸ்டான்லி, மட்டக்களப்பு
சகோ. விஜயன், மட்டக்களப்பு
சகோ. போல், மட்டக்களப்பு

**நட்புக்காக**
சகோ. பத்மநாதன் ரஜீவன், மட்டக்களப்பு
சகோ. ரமணன், ஆரையம்பதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## அறிமுகம்


கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே இந்த நூலை கையில் எடுத்து வாசிக்க ஆரம்பித்து இருக்கும் உங்கள் ஒவ்வொருவரையும் வாழ்த்துகின்றேன். இந்த "மணவாளன்" என்கின்றதான நூலை எங்களது கலியாண தினத்தில் வெளியிடுவதில் **ஓசான்னாவோடு** இணைந்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். தேவனுக்கே துதியும், கனமும், மகிமையும் உண்டாகட்டும்.

கர்த்தருடைய மகா பெரிதான கிருபையினால் 2016 ஆம் ஆண்டில் **"எருசலேமின் சமாதானத்துக்காக வேண்டிக்கொள்ளுங்கள்"** என்கின்றதான நூல் வெளியிடப்பட்டது. பின்னர் கடந்த வருடம் 2017 ஆம் ஆண்டில் **"வேதாகம தலைப்பியல் களஞ்சியம்"** மற்றும் **"வேதாகம இணைவசன துணைநூல்"** என்கின்றதான இரண்டு வேதாகம தொகுப்பு நூல்களை வெளியிடும் படி கர்த்தர் கிருபை செய்தார். இந்தியா இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களின் ஸ்தாபகரும், சுவிசேஷகருமான சகோ மோகன் சி. லாசரஸ் அவர்கள் நூல்களை வெளியிட்டு வைத்தார்கள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேலும் கர்த்தர் எங்களுக்கு கொடுத்த மகா உன்னத தரிசனமான **"Gospel to 20 million"** என்கின்றதான சுவிசேஷ பணிக்காக **100 க்கு மேற்பட்ட துண்டுப்பிரதிகளை** தயாரிக்கவும், **5 க்கு மேற்பட்ட சுவிசேஷகர்களுக்கான கைந்நூல்களை** தயாரிக்கவும் இந்நாட்களில் கர்த்தர் கிருபை செய்தார். இந்நாள் வரைக்கும் அன்பினாலே மாத்திரம் என்னை வழிநடத்தி வருகின்ற என் கர்த்தராகிய இயேசுவுக்கே நன்றி. **அவரே எல்லாம்! அவராலேயே எல்லாம்! அவருக்கே மகிமை!**




விசேஷமாக என்னுடைய வாழ்க்கையில் ஆலோசித்து வழிநடத்த தேவன் எனக்கு ஏற்படுத்தி தந்ததான **எனது அன்பின் தகப்பன் போதகர். குகன் இராஜதுரைக்காக** என் தேவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். என்னுடைய பதின்ம வயதுகளிலும், ஊழிய காரியங்களிலும் அநேகம் ஆலோசனைகளால் என்னை நடத்தும்படி கர்த்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கென்று ஏற்படுத்தி தந்த தகப்பனுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன். என்னுடைய அம்மா சியாமளா, சித்தி காந்திமதி, பெரியம்மா சுசிலா, அண்ணா ருக்ஷான், அண்ணி சுபா, மகள் ரியா என்று எனது குடும்பத்துக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகின்றேன். நான் பிறந்து நான்கு மாதமளவில் எனது தந்தை மரித்துப்போனாலும் என்னையும், என் சகோதரனையும் வளர்க்கும் படியாக எனது குடும்பம் எடுத்த பிரயாசமும், தேவன் எங்களை நடத்தின விதங்களும் ஆச்சரியம், அதிசயம் நிறைந்தவைகள். கர்த்தருக்கு ஸ்தோத்திரம். மேலும் கிறிஸ்துவுக்குள் மறைந்த எனது மாமா **போதகர். அருட் செல்வத்திற்காகவும்** நான் நன்றி செலுத்துகின்றேன். சிறுவயதிலே தந்தை போல இருந்து எங்களை நடத்தின அன்பு பெரியது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என்னுடைய திருச்சபை குடும்பங்களுக்காக நன்றி செலுத்துகின்றேன். என்னுடைய எல்லா நண்பர்களுக்காகவும், உறவுகளுக்காகவும், ஜெபக் குழுக்களுக்காகவும், அயலவர்களுக்காகவும் நன்றி செலுத்துகின்றேன்.

கிறிஸ்து வருமட்டும் ஓட்டத்தை பொறுமையோடும், அன்போடும், ஜெயத்தோடும் ஓட வாஞ்சிக்கின்றேன். கர்த்தரே என்னை ஆளுகை செய்து வழி நடத்தட்டும். ஆமென்!



கலியாணம் என்பது மணவாளனும், மணவாட்டியும் சேருகின்ற உன்னதமான தருணமாக இருக்கின்றது. இக்கலியாணத்தில் மணவாளனாக இயேசுகிறிஸ்துவையும் மணவாட்டியாக திருச்சபையையும் ஒப்பிட்டு வேதாகமம் பேசுவது ஆச்சரியம் நிறைந்த சத்தியமாக இருக்கின்றது. இயேசுகிறிஸ்து தன்னுடைய வருகையை உவமைகளாக சொல்லும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட கலியாணம் என்கின்றதான வார்த்தையினாலே எடுத்தியம்பி இருக்கின்றார்.

**பரலோகராஜ்யம் தன் குமாரனுக்குக் கலியாணஞ்செய்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. (மத் 22:2)**

**அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். (மத் 25:1)**

கர்த்தராகிய இயேசு தமது இரத்தத்தால் மீட்டுக்கொண்ட சபையின் மீது எவ்வளவு அன்பு வைத்திருக்கிறார் என்பதை **தாம் மீட்டுக் கொண்ட திருச்சபையை தமக்கு மணவாட்டியாக்குகிறார்** என்று அறியும் போது உணர முடிகிறது. இயேசு நல்லவர்.

இதற்கு மெருகேற்றுவாற் போல் அப்போஸ்தலனாகிய பவுலும் சபையை கிறிஸ்துவுக்காக ஆயத்தப்பட வேண்டிய கற்புள்ள கன்னிகை என்று குறிப்பிடுகின்றார்.

**நான் உங்களைக் கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து என்னும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்த படியால், உங்களுக்காகத் தேவ வைராக்கியமான வைராக்கியங் கொண்டிருக்கிறேன். (2 கொரி 11:2)**

இதன் மூலமாக மணவாட்டி என்கின்றதான திருச்சபை தன்னை எல்லா விதத்திலும் இயேசுகிறிஸ்து என்னும் மணவாளனுக்காக ஆயத்தப்படுத்த வேண்டியதாக இருக்கின்றது. பின்பு இந்த மணவாட்டி மணவாளன் வரும் நாளில் அவரோடு கூட கலியாணத்தின் மூலம் ஐக்கியப்படப் போகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம் பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். (வெளி *19:7*)**

பிரியமானவர்களே நாம் உலகத்தின் இறுதி நொடிகளுக்குள் நிற்கின்றோம். இதோ இயேசுகிறிஸ்துவின் வருகை மிகவும் சமீபமாக இருக்கின்றது. நாம் மனந்திரும்பி, பாவமன்னிப்பை பெற்று கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அவருடைய சரீரமாக மாறும் போது அவருடைய மணவாட்டி என்கின்றதான மகா உன்னதமான தகுதி நமக்கு உண்டாகின்றது. எத்தனை பெரிய பாக்கியம்.

பிரியமானவர்களே இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு நாம் ஆயத்தப்படுவோம்! பிறரையும் ஆயத்தப்படுத்துவோம்!

**சகோ. ருஷாந்தன் பெனடிக்**

***07.08.2018***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


1. அறிமுகம்
2. வேதாகம யுகங்கள் மற்றும் உடன்படிக்கைகள் 01
3. வேதாகம பண்டிகைகள் 21
4. மணவாளன், மணவாட்டி 31
5. இஸ்ரவேல் கலியாண முறை 51
6. ஒருவிரல் மணவாட்டி 77
7. உசாத்துணை 88


### முக்கிய குறிப்பு

இந்நூலானது மணவாளன் இயேசுவுக்கும், மணவாட்டி சபைக்கும் இடையிலான உறவைக்குறித்து பேசுகின்றது. ஆகவே **மணவாளன், மணவாட்டி, கலியாணம்** என்கின்ற உருவகத்தை இந்நூல் விபரிக்கின்றது. இயேசு கிறிஸ்துவின் வருகை தொடர்பிலும், யுகங்கள், மற்றும் உடன்படிக்கைகள் தொடர்பிலும் அநேக பார்வைகளும், தர்க்கங்களும் உண்டு. ஆனாலும் இந்த நூலானது பொதுவான பார்வையிலும் தேவனாகிய கர்த்தரின் மகா பெரிதான வழிநடத்துதலிலும் மணவாளன், மணவாட்டி தொடர்புறும் சம்பவங்களாக தொகுக்கப்பட்டுள்ளது.

வேதாகமத்தின் வெளிச்சத்தில் ஒவ்வொரு பகுதிகளாக **வாசியுங்கள். ஆராயுங்கள். தியானியுங்கள். ஐக்கியப்படுங்கள். மணவாட்டியாக ஆயத்தமாகுங்கள். பிறரையும் ஆயத்தப்படுத்துங்கள்.** தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணவாளன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# வேதாகம யுகங்கள் மற்றும் உடன்படிக்கைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுகங்கள்

**யுகம் என்பது மனித சரித்திரம் சம்பந்தப்பட்ட, தேவனால் நியமிக்கப்பட்ட கால அளவாய் இருக்கிறது.** ஒவ்வொரு யுகத்திலும் தேவன் தனக்கான செய்தியாளர்களை அனுப்பி ஜனத்தாருக்கு செய்திகளை பரவும்படி செய்தார். நாம் இந்த மணவாளன் நூலுக்காக வேதாகமத்தை நான்கு வித யுகங்களாக பிரித்து உற்று நோக்குவோம்.

| யுகங்கள் | செய்தியாளர் | வேதாகமத்தில் |
|---|---|---|
| அறியாமையின் யுகம் | குடும்ப பிதா | ஆதியாகமம் 1-11 |
| இஸ்ரவேல் யுகம் | இஸ்ரவேல் | ஆதியாகமம் 12 – அப்போஸ்தலர் |
| சபை யுகம் | சபை | பெந்தெகொஸ்தே நாள் முதல் சபை எடுத்துக் கொள்ளல் |
| மணவாளனின் ஆளுகை | மணவாளன் | சபை எடுத்துக் கொள்ளல் முதல் நித்திய இராஜ்யம் |

**அறியாமையின் யுகம்**

இது ஆதாம் முதல் ஆபிரகாம் வரையானது. இதனையும் இன்னும் மூன்று பகுதிகளாக பிரிக்கலாம்.

1. அறியாமையின் காலம் (ஆதியாகமம் 1:28-3:22)
2. மனசாட்சியின் காலம் (ஆதியாகமம் 3:23-8:20)
3. மனித அரசாங்க காலம் (ஆதியாகமம் 8:21-11:32)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நாட்களில் ஜனங்கள் ஒரே மொழியும் ஒரே கூட்டமுமாக வாழ்ந்தார்கள். (ஆதி 11:6). இந்த நாட்களில் எழுதப்பட்ட வேதாகமம் காணப்படவில்லை. ஆனாலும் தேவனுடைய வார்த்தையை பிரத்தியட்சமாக ஒருவர் அல்லது ஒவ்வொரு குடும்பப்பிதா அறிந்து கொள்ளுவார். அதனை மக்களுக்கு அவர் அறிவிப்பார். குடும்பத்தின் தலைவனே குடும்பத்திற்கு ஆசாரியன்.

இந்நாட்களில் தேவன் பெரிய அளவிலான நியாயத்தீர்ப்பை ஜனங்களுக்கு கட்டளையிட்டார். நோவாவின் நாட்களில் ஏற்பட்டதான ஜலப்பிரளயம் இதில் பிரதானமானது.

**இஸ்ரவேல் யுகம்**

இது ஆபிரகாம் முதல் இரண்டாம் வருகை வரை தொடரும். இதனை மூன்று பகுதிகளாக பிரித்து நோக்கலாம்.

1. முற்பிதாக்கள் காலம் அல்லது வாக்குத்தத்த காலம் - ஆபிரகாம் முதல் மோசே வரை (ஆதி 12:1 – யாத் 12:37)
2. நியாயப்பிரமாண காலம் - மோசே முதல் பெந்தெகொஸ்தே நாள் வரை (சபை துவக்கம்)
3. உபத்திரவகாலம் - சபை எடுத்துக்கொள்ளபடும் நாள் துவங்கி கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை

இங்கு இரட்சிப்பின் வழியாக மணவாளன் இயேசுவின் மீது வைக்கின்றதான விசுவாசம் காணப்படும். இந்த நாட்களில் எழுதப்பட்ட வேதாகமமாக பழைய ஏற்பாடு மாத்திரம் காணப்பட்டது. இவர்களின் செய்தியாளர்களாக யூதர்கள் பிரதானமாக காணப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த யுகத்திற்கென்று நான்கு நிபந்தனையற்ற உடன்படிக்கைகள் காணப்பட்டன.

- ஆபிரகாமின் உடன்படிக்கை (ஆதி12:1-3)
- தாவீதின் உடன்படிக்கை (2 சாமு 7:8-16)
- பாலஸ்தீனிய உடன்படிக்கை (ஆதி 15:18-21)
- புதிய உடன்படிக்கை (எரே 31:31-34)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவைகள் அனைத்தும் மணவாளன் இயேசுகிறிஸ்துவின் (மேசியாவின்) இரண்டாம் வருகையில் அவர் ராஜாவாக வரும்பொழுது நிறைவேறும். யூதர்கள் இயேசுவை தங்களது மேசியாவாய் ஏற்றுக் கொள்வதற்கு பதில் அவரை புறக்கணித்து சிலுவையில் அறைந்தனர். **இதினிமித்தம் தேவன் சபையை பூமியில் தனது ஸ்தானபதியாகவும் மணவாட்டியாகவும் ஏற்படுத்தினார்.**

**சபை யுகம்**

இது பெந்தெகொஸ்தே நாள் முதல் சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை தொடரும். இதன் கால அளவு அறியப்படவில்லை. இதனை கிருபையின் காலம் என்றும் சொல்லலாம்.

இரட்சிப்பின் வழி இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பதாக இருக்கின்றது. எழுதப்பட்ட வேதம் அந்நாட்களில் பழைய ஏற்பாடாகவும் இந்நாட்களில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இணைந்த முழுவேதாகமமும் காணப்படுகின்றது. இந்நாட்களின் செய்தியாளர்களாக விசுவாசிகள் அனைவரும் காணப்படல் வேண்டும் என்று மணவாளன் இயேசுகிறிஸ்துவினுடைய கட்டளையாக இருக்கின்றது. (மத் 28:18-20, 2 கொரி 5:20). நியாயப்பிரமாணமாக இயேசுவின் மரணம் மூலமாக கிருபை வழங்கப்படுகின்றது. இயேசுகிறிஸ்துவினால் நியாயப்பிரமாணம் நிறைவேற்றி தீர்க்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் எல்லா விசுவாசிகளிலும் வாசம்பண்ணுகிறார்.

**உபத்திரவக்காலம்**

உபத்திரவக்காலம் இஸ்ரவேல் யுகத்தின் கடைசி ஏழு ஆண்டுகளாய் இருக்கிறது. இது இஸ்ரவேலருடன் அந்திக்கிறிஸ்துவினால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழு ஆண்டுகள் சமாதான உடன்படிக்கை கையெழுத்தானது முதல் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை தொடரும். இந்நாட்களில் இரட்சிப்புக்கான வழியானது கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசமாக காணப்படுகின்றது. இந்நாட்களில் முழு வேதாகமமும் காணப்படும். செய்தியாளர்களாக 1,44,000 யூத சுவிஷேசகர்களும் (வெளி 7) தேவ தூத சுவிஷேசகர்களும் (வெளி 14:6-7) காணப்படுவார்கள்.

**மணவாளனின் ஆளுகை**

இது மணவாளன் இயேசுவின் இரண்டாம் வருகை முதல் வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு வரை தொடரும். இயேசு 1000 வருடங்கள் பூமியில் அரசாளுவார். செய்தியாளராக இயேசுவே இருப்பார். பரிசுத்த ஆவியானவர் உலகலாவிய அளவில் விசுவாசிக்கின்றவர்கள் மத்தியில் வாசம் பண்ணுவார். (யோவேல் 2:28-29)

மனிதனால் உருவாக்கப்பட்ட எந்த மதங்களும் பூமியில் இருக்காது. காரணம் சாத்தான் கட்டப்பட்டு இருப்பதால் அவனது செயல்கள் எதுவும் பூமியில் இல்லை.

- இஸ்ரவேல் - திரும்ப கூட்டிச்சேர்க்கப்படும். (ஏசா 35:3-10)
- உலகளாவிய சமாதானம். (சங் 46:9, ஓசியா 2:18, மீகா 4:3)
- கிறிஸ்து ராஜாவாய் ஆளும் பூரணமான அரசாங்கம் (ஏசா 11:1-5, சக 14:9)
- உலகளாவிய செழிப்பு. (சங் 72:7)
- உலகளாவிய அளவில் தேவனைப் பற்றிய அறிவு. (ஏசா 11:9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறிஸ்துவின் நியாயாசனம்

சபை யுகத்தில் விசுவாசிகளுக்கு மூன்று விதமான நியாயத்தீர்ப்புகள் இருக்கின்றன.

- **பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பு**

  எல்லா மனிதரின் பாவங்களுக்காக கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கிரயம் செலுத்தி பதிலாகி இருக்கிறார். பாவத்தின் சம்பளம் மரணம். (ரோமர் 6:23). இதினிமித்தம் கிறிஸ்துவுக்குள்ளான ஒவ்வொருவருக்கும் ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. (ரோமர் 8:1) 2 கொரி 5:19-21, கலாத்தியர் 3:13 ல் ஒருவருக்குப்பதிலாக மரிக்கும் மரணம் அளிக்கப்பட்டுள்ளது.

- **சுயத்தின் நியாயத்தீர்ப்பு**

  நம்மை நாமே சோதித்தறிந்தால் நியாயந்தீர்க்கப்படமாட்டோம். தவறுவோமெனில், அது நமக்கு சிட்சையைக்கொண்டு வரும். (1 கொரி 5:1-5, 11:31, 32, 2 கொரி 2:5-7, எபி 12:7, 1 யோவான் 1:9).

- **கிறிஸ்துவின் நியாயாசனம**

  பிரதிபல நோக்கத்திற்காக விசுவாசிகளின் கிரியைகள் பரிசீலிக்கப்படுதல். (2 கொரி 5:10).

கிறிஸ்துவின் நியாயாசனம் பிரதிபலனளிக்கும் நேரத்தைக் குறிக்கிறது. நமது மாம்ச கிரியைகள் மரம், புல், வைக்கோல் போன்று காணப்பட்டால் அக்கினியானது அதனை எரித்துப்போடும், பரிசுத்த ஆவியானவரின் பெலத்தால் உண்டான நமது கிரியைகள் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள் போன்று காணப்பட்டால், அது நமது பிரதிபலனாய் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறெ அஸ்திபாரத்தைப் போட ஒருவனாலும் கூடாது. ஒருவன் அந்த அஸ்திபாரத்தின் மேல் பொன், வெள்ளி, விலையேறப் பெற்ற கல், மரம், புல், வைக்கோல் ஆகிய இவைகளைக் கட்டினால், அவனவனுடைய வேலைப்பாடு வெளியாகும். நாளானது அதை விளங்கப் பண்ணும். ஏனெனில் அது அக்கினியிலே வெளிப்படுத்தப்படும். அவனவனுடைய வேலைப்பாடு எத்தன்மையுள்ளதென்று அக்கினியானது பரிசோதிக்கும். அதின் மேல் ஒருவன் கட்டினது நிலைத்தால், அவன் கூலியைப் பெறுவான். ஒருவன் கட்டினது வெந்துபோனால், அவன் நஷ்டமடைவான். அவனோ இரட்சிக்கப்படுவான். அதுவும் அக்கினியிலகப்பட்டுத் தப்பினது போலிருக்கும். நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1 கொரி 3:11-16).**

கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக கிரியைகளுக்கு தக்கதாக விசுவாசிக்கு பிரதிபலன் மறுக்கப்படலாம், ஆனால், அவரது இரட்சிப்பை அவர் ஒருபோதும் இழப்பதில்லை. *(2 தீமோ 2:12-13).*

**இதோ, சீக்கிரமாய் வருகிறேன், அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது. (வெளி22:12)**

பின்வாங்கிப் போன விசுவாசிகளுக்கு கிறிஸ்துவின் நியாயாசனத்திலிருந்து எவ்வித பிரதிபலனும் கிடைப்பதில்லை. (எபி 6:7-12). கிறிஸ்துவின் நியாயாசனம் பண்டைய உலகின் தலை சிறந்த ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பிட்டு விவரிக்கப்படுகிறது. (1 கொரி 9:24-27). கிறிஸ்துவின் நியாயாசனத்தில் அளிக்கப்படும் பிரதிபலன்கள் கிருபையை அடிப்படையாகக்கொண்டு அளிக்கப்படுகிறது. (யாக் 2:12,13). நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்துவினால் நியாயந்தீர்க்கப்படுகிறவர்களாய் இருக்கிறபடியால், நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்கக்கூடாது. (மத் 7:1-2).

**வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு**

வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு இறுதி நியாயத்தீர்ப்பாய் இருக்கிறது. (வெளி 20:11,15). ஆயிர வருட அரசாட்சியின் இறுதிக்கட்டத்தில் இந்த இறுதி நியாயத்தீர்ப்பு இடம் பெறும் (வெளி 20:7-15). இரட்சிப்படையாதோர், அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாந்தீர்க்கப்படுவர். (வெளி 20:12). இந்த நியாயத்தீர்ப்பு மனிதக் கிரியைகள் தேவ நீதியை திருப்திபடுத்துவதில்லை என்பதைக் காட்டுகிறது. தேவன் முற்றிலும், கிறிஸ்துவின் சிலுவை மரணத்தினால் மட்டுமே திருப்தி கொண்டு இருப்பதை காட்டுகிறது. இரட்சிப்படையாதோர், காட்டப்பட்டுள்ளபடி தேவனுடைய பரிசுத்தத்தை நிறைவேற்றி அவரை திருப்திபடுத்த தவறியுள்ளனர், இப்படிப்பட்டோர் நியாயந்தீர்க்கப்பட்டு, எரிகிற அக்கினியும் கந்தகமும் உள்ள கடலில் பங்கடைவர் (வெளி 20:15).

## <u>உடன்படிக்கைகள்</u>

பரிசுத்த வேதாகமத்தில் உடன்படிக்கை என்பது தேவனுக்கும், மனிதனுக்கும் இடையேயான ஒப்பந்தமாக இருக்கின்றது. பரிசுத்த வேதாகமத்தில் இருக்கின்றதான சில உடன்படிக்கைகள் நிபந்தனையற்றவைகள். அவற்றை தேவன் தன் பேரிலே தாமே அவைகளை நிறைவேற்றுவார். அவற்றில் மனிதனின் கீழ்ப்படிதல் அல்லது செயல்பாடுகள் பெரியளவில் முக்கியப்படுத்தப்படவில்லை. ஆகிலும் மற்ற உடன்படிக்கைகள் நிபந்தனைக்குட்பட்டவைகள் அவைகளுக்கு மனிதரின் கீழ்ப்படிதல் அவசியம். வேதத்தில் உள்ள எல்லா உடன்படிக்கைகளுக்கும், மணவாளன் இயேசுவே மையமாக இருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏதேனின் உடன்படிக்கை

**மணவாளன் இயேசு இரண்டாம் ஆதாமாயிருக்கிறார்.**

**அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது. பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது. ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன். இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர். (1 கொரி 15:45-47).**

உடன்படிக்கையின் அடிப்படை

- பலுகிப்பெருகி பலன் கொடுத்தல் (ஆதி. 1:28).
- பூமியைக் கீழ்ப்படுத்துதல் (ஆதி. 1:28).
- மிருக சிருஷ்டிப்பில் ஆளுகையைப்பெற்றிருத்தல் (ஆதி. 1:28).
- புல் பூண்டு மற்றும் கனி வகைகளை உண்வாகக் கொள்ளுதல் (ஆதி. 1:29).
- தோட்டத்தை பண்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் (ஆதி. 2:15).
- நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்கக்கூடாது (ஆதி. 2:17).

## ஆதாமின் உடன்படிக்கை

**மணவாளன் இயேசு ஸ்திரீயின் வித்தாயிருக்கிறார். (ஆதி. 3:15).**

ஆதாமின் உடன்படிக்கை, மனிதனின் வீழ்ச்சி, திரும்ப சேர்த்துக்கொள்ளப்படுதல், சிருஷ்டி, இவைகளுடன் சம்பந்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவாளன் திரும்ப வரும்பொழுது சிருஷ்டி தனது அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறும். (ரோமர். 8:21) பாவத்தை, சாத்தான் இவ்வுலகில் கொண்டு வந்தான். இதினிமித்தம் சாபம் பெற்று சபிக்கப்பட்டான். (ஆதியாகமம் 3:14). ஆதாமின் வம்சத்தில் சேத்தின் வம்சா வழி மூலம் ஸ்திரீயின் வித்து தொடர்ந்தது. நோவா (ஆதி 6:8-10), சேம் (ஆதி 9:26,27), ஆபிரகாம் (ஆதி 2:1-4), ஈசாக்கு (ஆதி 17:19-21), யாக்கோபு (ஆதி 28:10-14), யூதா (ஆதி 49:10), தாவீது (2 சாமு 7:5-17), வழியே மணவாளன் இயேசுகிறிஸ்துவில் நிறைவேறியது (ஏசா 7:9-14, மத் 1:20-23).

## நோவாவின் உடன்படிக்கை

**மணவாளன் இயேசு சேமின் வம்சத்தில் எல்லாரிலும் பெரிய குமாரனாய் இருக்கிறார். (லூக் 3:36 ஆதி 9:23-27).**

ஜலப்பிரளயம் திரும்ப பூமியில் ஏற்படாது என்பது தேவன் நோவாவுடன் செய்த உடன்படிக்கை (ஆதி 8:20-9:27). இந்த உடன்படிக்கையில் மனிதன் பூமிக்குரிய உறவு, பருவ காலங்கள், இரவு பகல், விதைப்பு அறுப்பு மனித ஆளுகை என்பன அறிமுகம் செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டது. (ஆதி 8,9). இந்த உடன்படிக்கையின் போக்கில் காமின் வம்சத்திற்கு சாபமும் சேமின் வம்சம் ஆவிக்குரிய ஆசீர்வாதத்தின் ஆதாரமும், யாப்பேத் வம்சத்திற்கு ஆளுகையும் வழங்கப்பட்டது (ஆதி 9). வானவில் வாக்குத்தத்தத்தின் அடையாளமாய் கொடுக்கப்பட்டது.

## ஆபிரகாமின் உடன்படிக்கை

**ஆசீர்வாதத்தின் சந்ததியாக, வித்தாக மணவாளன் இயேசு இருக்கிறார். (ஆதி 22:18).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது ஒரு நிபந்தனையற்ற உடன்படிக்கை. இதை தேவன் தாமே நிறைவேற்றுகிறார், நிறைவேற்றி வருகின்றார்.

**"நான் உன்னை பெரிய ஜாதியாக்குவேன்"**

**நிறைவேறுதல்**

- யூதர்கள் பெரிய ஜாதியானார்கள். (ஆதி *13:16* யோவான் *8:37*)
- அரேபியர்கள் பெரிய ஜாதியானார்கள். (ஆதி *17:20*)
- கிறிஸ்துவுக்குள் அவருடைய சந்ததி பெரிய ஜாதியானது. மேலும் இதுவே பிரதானமானதாகவும் இருக்கின்றது (ரோமர் *4:16-17, 9:7-8* கலாத்தியர். *3:7,29*).

**"நான் உன்னை ஆசீர்வதிப்பேன்"**

**நிறைவேறுதல்**

- ஆபிரகாம் ஆசீர்வதிக்கப்படுதல் ( ஆதி *13:14-17, 15:18-21. 24:35*),
- கிறிஸ்துவுக்குள் விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படுதல் (ரோமர் *4:16-17, 9:7-8* கலா *3:7,29*).

## மோசேயின் உடன்படிக்கை

**மணவாளன் இயேசு இந்த உடன்படிக்கையை நிறைவேற்றினார். (மத் 5:17)**

இவ்வுடன்படிக்கை தேவனுக்கும் இஸ்ரவேலருக்குமானது. மோசே மூலம் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணமே இவ்வுடன்படிக்கை ஆகும். (தோரா). இது நிபந்தனையுள்ள உடன்படிக்கை. இது ஜனங்களின் கீழ்ப்படிதலை சார்ந்து இருந்தது. (உபா *28*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் உடன்படிக்கையில் முதலாவது கட்டளைகள் விதிக்கப்பட்டது. இது நியாயப்பிரமாணம் என்று கூறப்பட்டது. நியாயப்பிரமாணத்தை ஒரு மனிதனும் பரிபூரணமாக அர்ததம் உணர்ந்து கைக்கொள்ளல் இயலாது என்பதையும் இதினிமித்தம் அவர்களுக்கு ஓர் இரட்சகர் அவசியம் என்பதையும் உணர்த்தி நிற்கின்றது. இரண்டாவது ஆசரிப்பு கூடாரமும், பலிகளும் விதிக்கப்பட்டது. இவை மணவாளன் இயேசுவின் நிழலாய் அவரை இரட்சகராய் காட்டுகின்றன. இதன் மூலம் பாவத்தின் நித்திய தண்டணைக்காக ஒரு ஒப்பற்ற தியாகபலி அவசியம் என்பதையும் உணர்த்தி நிற்கின்றது. மூன்றாவது சமுதாயப்பிரமாணம் விதிக்கப்பட்டது. இது இஸ்ரவேல் தேசம் பாதுகாக்கப்படுவதற்கான சுகாதாரம், ஒழுக்கநெறிகள், வரிவிதிப்பு, மற்றும் பல பிரமாணங்கள் விதிக்கப்பட்டன.

## பாலஸ்தீனிய உடன்படிக்கை

மத்திய கிழக்கு நாட்டில், ஆபிரகாமுக்கு நிபந்தனையற்ற நிலையில் தேவன் அளித்த, ஒரு நிலப்பகுதியைக் குறித்த உடன்படிக்கையாகும். தேவன் குறிப்பிட்டபடி யூதர்கள் அதை முழுமையாக சுதந்தரிக்கவில்லை. ஆனால் அது ஆயிர வருட அரசாட்சியில் சுதந்தரித்துக் கொள்ளப்படும். *(உபா 30:1-9, ஏசா 11:10-12, எரே 23:3-8, எசே 37:21-25).*

- *உபா 30:1 - ஜனங்கள் கீழ்ப்படியாமைக்காக சிதறடிக்கப்படுதல் (உபா 28:63-68)*
- *உபா 30:2 - இஸ்ரவேலின் எதிர்கால மனந்திரும்புதல்*
- *உபா 30:3 - கர்த்தர் திரும்ப வருதல் (ஆமோஸ் 9:9-14 அப் 15:14-17).*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உபா 30:4 - தேசத்தைத் திரும்பப்பெறுதல் (ஏசா 11:11,12 எரே 23:3-8, எசே 37:21-25).
- உபா 30:6 - தேசங்கள் ஆதாயப்படுத்தப்படல் (ரோமர் 11:26-27, யோவேல் 2:14-16).
- உபா 30:7 - இஸ்ரவேலருடைய சத்துருக்களின் நியாயத்தீர்ப்பு (யோவேல் 3:1 -8).
- உபா 30:9 – தேசத்தின் செழிப்பு (ஆமோஸ் 9:11-15).

## தாவீதின் உடன்படிக்கை

**மணவாளன் இயேசு யூதர்களின் ராஜாவாயிருந்து, சதா காலங்களிலும் அரசாளுவார். (லூக் 1:31-33 யோவா 19:19-22).**

இவ் உடன்படிக்கையின் அடிப்படையில் சதாகாலங்களிலும் அரசாளுகிற ராஜாவை இஸ்ரவேல் பெற்று இருக்கும். அவர் தாவீதின் வம்சத்தில் உள்ள தாவீதின் வம்ச வரிசையில் வருவார். அவர் ஆளக்கூடிய இராஜ்யத்தைப் பெற்று இருப்பார். தேவனாகிய கர்த்தர் ஆளக்கூடிய அரியணையைக் அவருக்கு கொடுப்பார். அந்த அரியணை சதாகாலங்களிலும் இருக்கும். தாவீதின் குமாரனாக ஒரே ராஜாவாக எருசலேமில் மணவாளன் இயேசு முட்களினால் முடிசூடப்பட்டார். (மத் 27:29). தாவீதின் உடன்படிக்கை மணவாளன் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் நிறைவேறும். (லூக் 1:32, அப் 2:29-30, வெளி 20:4-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய உடன்படிக்கை

**மணவாளன் இயேசுவின் தியாகபலி இதன் அஸ்திபாரமாய் இருக்கிறது., மற்றும் ஆயிர வருட அரசாட்சியில் இது வலியுறுத்தப்படும். (1 கொரி 11:25)**

புதிய உடன்படிக்கை ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் நித்திய ஆசீர்வாதத்தை உறுதியளிக்கிறது. இது நிபந்தனையற்றது. தேவன்தாமே இதை நிறைவேற்றுவார். புதிய உடன்படிக்கை மோசேயின் உடன்படிக்கையைவிட மேலானது. இதில் சிறியவர் முதல் பெரியவர் வரை எல்லோரும் தேவனை அறிந்துகொள்வார்கள். புதிய உடன்படிக்கையின் கீழ் பாவங்கள் அனைத்தும் மறக்கப்படுகின்றன.

இது இயேசுகிறிஸ்துவின் முழுமையான தியாக பலியின் மீது, சார்ந்து இருக்கிறது. ( எபி 7,8,9).

## பரலோக இராஜ்யம் கலியாணத்திற்கு ஒப்பாயிருக்கிறது

பரலோக இராஜ்யம் இப்பூமியில் காணும் வகையில் எதிர்கால கர்த்தரின் இராஜ்யமாக இருக்கும் (லூக் 1:31-33). பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பது, ஆயிரவருட ஆளுகையில் சரீரப்பிரகாரமாய் உயிருடன் இருந்து அதில் பிரவேசிப்பவர்களையும் உள்ளடக்கியுள்ளது. (மத் 13:24-30, 36-43, 47-50).

தேவனுடைய இராஜ்யம் ஆவிக்குரியது (யோவான் 3:3, ரோமர் 14:17, லூக் 17:20). மறுபடி பிறப்பதன் மூலம் தேவ இராஜ்யத்தில் பிரவேசிக்கலாம் (யோவான் 3:3-7). தேவ இராஜ்யத்தின் தெய்வீக அதிகாரம் எல்லா சிருஷ்டிகளின் மீது எல்லா காலங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தப்படுகிறது. (லூக் 13:28, 29, எபி 12:22, 23). இராஜா ஓர் கன்னிகையினிடத்தில் பிறப்பார் என தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டுள்ளது (ஏசா 7:14,மத் 1:18-25) அவர் பெத்லகேமில் பிறப்பார் என்பதும் உரைக்கப்பட்டுள்ளது (மீகா 5:2, மத் 2:1). இராஜ்யம் அப்பொழுதே அறிவிக்கப்பட்டதாய் இருந்தது (மத் 4:17), ஆனால் யூதர்களால் ஒழுக்க ரீதியாகவும் (மத் 11:20) அரசியல் கண்ணோட்டத்திலும் புறக்கணிக்கப்பட்டது (மத் 21:42-43). அதன் விளைவு ராஜா முட்கிரீடம் சூட்டப்பட்டார். அதன் பின்னர் அவர் தனது சபையை கட்டுவதற்கான நோக்கத்தை அறிவித்தார். (மத்16:18). சபை மற்றும் பரலோக இராஜ்யம் ஒன்றன்பின் ஒன்றாக இரகசியமாய் காணப்பட்டது - அவை இரண்டும் ஆவிக்குரிய இராஜ்ய சம்பந்தப்பட்டதைக் குறிக்கிறது. (எபே 3:9-11). இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது, அவர் ஆயிர வருட ஆளுகையை, நித்தியம் துவங்குமுன்னர் ஸ்தாபிப்பார். (மத் 24:27-30, லூக் 1:31-33, அப் 15:14-17, வெளி 20:1-10). ஆயிர வருட ஆளுகையின் இறுதியில், இயேசுகிறிஸ்து இராஜ்யத்தை பிதாவின் கரத்தில் ஒப்படைப்பார். (1 கொரி 15:24-28). நித்திய சிங்காசனம் தேவனுடையதும், ஆட்டுக்குட்டியானவருடையதுமாய் இருக்கிறது (வெளி 22:1).

### இராஜ்யத்தில் வாழ்க்கை

கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்க்கை என்பது நாம் நமது தேவனாகிய கர்த்தரிடத்தில் நமது முழு இருதயத்தோடும் நமது முழு ஆத்துமாவோடும் நமது முழு மனதோடும் அன்புகூருவதேயாகும். இது இயேசுகிறிஸ்து இப்பூவுலக மக்களுக்கு கற்பித்த முதலாம் பிரதான கற்பனை. (மத் 22:34-40, மாற்கு 12:30-33)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அறிந்த கேள்விப்பட்ட சுவிசேஷம் நாம் அந்த கலியாணத்திற்குள்ளே நுழைவதற்கான இலவச **அழைப்பிதழாக** இருக்கின்றது. ஆனாலும் இது விருந்து உண்ணுவதற்கான அழைப்பிதழாக மாத்திரம் இல்லை. மாறாக தகுதியற்ற மனிதனை, மனிதக்கூட்டமான திருச்சபைபை மணவாட்டியாக மாற்றி மணவாளன் கிறிஸ்துவோடு இணைப்பதற்கான அழைப்பாகவே இது இருக்கின்றது.

**பிரியமானவர்களே இந்த உன்னதமான அழைப்புக்கு யார் யார் பாத்திரர்???**

இந்த பந்தியை வாசித்துக் கொண்டு இருக்கின்றீர்களே நீங்களும் அதற்கு பாத்திரரே! காரணம் "மெய்யாகவே பிதாவாகிய தேவன் உங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே அன்பாக இருக்கிறார்." நீங்கள் தனிமையில் ஒரு மேஜையிலோ, படுக்கையறையிலோ, சமையலறையிலோ, கழிவறையிலோ, விருந்தினர் அறையிலோ, மொட்டைமாடியிலோ, நண்பனின் வீட்டிலோ, உறவினன் வீட்டிலோ, எதிரியின் வீட்டிலோ, மரண வீட்டிலோ, ஓடும் ரயிலிலோ, பறக்கும் விமானத்திலோ, குடிசையிலோ, மாளிகையிலோ, மார்க்கெட்டிலோ, வைத்தியசாலையிலோ, சிறைச்சாலையிலோ, உலகத்தின் எந்த மூலையிலோ இருந்து இந்த புத்தகத்தை வாசித்துக் கொண்டு இருக்கலாம்.

***நீ எந்த இடத்திலே இருந்தாலும், இந்த அழைப்பிதழுக்கு நீ பாத்திரனே!***

நீ கிறிஸ்தவனாகவோ, இந்துவாகவோ, முஸ்லீமாகவோ, பௌத்தனாகவோ, யூதனாகவோ, கிரேக்கனாகவோ, தமிழனாகவோ, சிங்களவனாகவோ, பறங்கியாகவோ, இயேசுவைப் பற்றி கேள்விப்பட்டாலே கோபப்படுகிறவனாகவோ, நாத்திகனாகவோ, பகுத்தறிவாதியாகவோ நீ எதுவாகவும் இருந்து இந்த புத்தகத்தை நீ வாசித்து கொண்டு இருக்கலாம்.

***நீ எதை பின்பற்றி கொண்டு இருந்தாலும், இந்த அழைப்பிதழுக்கு நீ பாத்திரனே!***

நீ ஏழையோ, பணக்காரனோ, கொலைகாரனோ, காருண்ய காரனோ, முட்டாளோ, அறிவாளியோ, கொள்ளைக்காரனோ, தானதருமியோ, கஞ்சனோ, வள்ளலோ, பொய்யனோ, நீதிமானோ, நோயாளியோ, சுகதேகியோ, நல்லவனோ, கெட்டவனோ நீ எப்படிப்பட்டவனாகவும், எப்படிப்பட்ட மனநிலையில் இருந்து வேண்டுமென்றாலும் இந்த புத்தகத்தை நீ வாசித்து கொண்டு இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***நீ எப்படிப்பட்டவனாகவும், எப்படிப்பட்ட மனநிலையில் இருந்தாலும், இந்த அழைப்பிதழுக்கு நீ பாத்திரனே!***

காரணம் கர்த்தராகிய தேவன் நம்மேல் அன்பு வைத்தார். அதனால் அவருடைய ஒரே பேறான குமாரனை **மணவாளனாக** நமக்காக தந்தார்.

***நாம் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து அவருக்குத் துதிசெலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது, அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள் என்று சொல்லக் கேட்டேன். (வெளி 19:7)***

***அப்படியே அவர்கள் வாங்கிப்போனபோது மணவாளன் வந்துவிட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது. (மத் 25:10)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# வேதாகம பண்டிகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2

# வேதாகம பண்டிகைகள்

வேதாகம பண்டிகைகள் ஏழும் வருங் காலங்களின் நிழலாயிருக்கின்றன. மேலும் இவை மணவாளன் இயேசுவை மையப் பொருளாகவும் கொண்டன.

**போஜனத்தையும் பானத்தையும் குறித்தாவது, பண்டிகை நாளையும் மாதப் பிறப்பையும் ஓய்வு நாட்களையுங் குறித்தாவது, ஒருவனும் உங்களைக் குற்றப் படுத்தாதிருப்பானாக. அவைகள் வருங் காரியங்களுக்கு நிழலாயிருக்கிறது. அவைகளின் பொருள் கிறிஸ்துவைப்பற்றினது. (கொலோ *2:16-17*)**

1. பஸ்கா பண்டிகை
2. புளிப்பில்லா அப்பப்பண்டிகை
3. முதற்பலன் சேர்ப்பு பண்டிகை
4. பெந்தெகொஸ்தே பண்டிகை
5. எக்காளப் பண்டிகை
6. பிராயச்சித்தப்பண்டிகை
7. கூடாரப்பண்டிகை

**பஸ்காப்பண்டிகை (உபா *16:1-8*, லேவி *23:5*)**

இப்பண்டிகை இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, விடுபட்ட அன்று ராத்திரியில் கர்த்தருடைய தூதனானவர் எகிப்தை கடந்து சென்று அவர்களின் தலைச்சன்கள் அனைத்தையும் சங்கரித்தார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இரவே இஸ்ரவேலர் மோசேயின் கீழ் எகிப்தைவிட்டு வெளியேறினர்.

வயது ஒன்றாக இருக்கக்கூடிய பழுதற்ற ஆண் ஆட்டுக்குட்டியை நிசான் மாதம் 14 ம் நாளில் அடிக்கப்படுவதற்கு, நான்கு நாட்கள் முன்னதாகவே கொண்டு வரப்படவேண்டும். அதன் எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படா வண்ணம் மிக கவனத்துடன் அதை அடித்து புசிக்க வேண்டும். ஆட்டுக்குட்டியை அடித்து அதை நெருப்பில் சுட்டு, அதை கசப்பான கீரையுடன் புசிக்கவேண்டும், அதில் விடியற்காலம் வரைக்கும் எதுவும் மீந்திருக்கக்கூடாது. (யாத் 12:1-10).

பஸ்கா பண்டிகையின் ஆரம்பத்தில், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை கதவு சட்டத்திலும், ஜன்னலின் சட்டத்திலும் பூச வேண்டும், அப்படி பூசப்பட்ட வீடு எகிப்தின் கடைசி வாதைக்கு உட்படாது. (யாத் 12:21-28). எகிப்தின் மீது வந்த வாதைகள் அனைத்தும் அவர்கள் தேவர்கள் மீது வந்த வாதைகள் ஆகும்.

பஸ்கா பண்டிகை, ஆபிரகாமுக்கு அளித்த வாக்குத்தத்தின்படி, வருடாந்திரப்பண்டிகையாய் இருக்கிறது.

**நிறைவேறுதல்**

பலிக்கான ஆட்டுக்குட்டி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக் காட்டுகிறது. (1 கொரி 5:7). கிறிஸ்து நிசான் மாதம் 14 ம் தேதி சிலுவையில் தொங்கி மரித்தார், அவர் தான் மரிப்பதற்கு நான்கு தினங்களுக்கு முன், நிசான் மாதம் 10 ம் தேதிக்கு முன்னரே எருசலேமில் பிரவேசித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோம சிப்பாய்கள் கள்ளரின் கால் எலும்பை முறிக்கும்போது, இயேசு மரித்து இருந்தார், ஆகையால் அவர் கால் எலும்பை அவர்கள் முறிக்கவில்லை. (யோவான் *19:32,33*). சுடப்பட்ட ஆட்டுக்குட்டி நியாயத்தீர்ப்பையும், கசப்பான கீரை, பாவம் அல்லது தோல்வி இவைகளை பிரதிபலிக்கிறது எனக் கருதப்படுகின்றது. ஆட்டுக்குட்டியை புசிப்பது இயேசுகிறிஸ்துவின் கிரியையில் விசுவாசம் வைப்பதைக் காட்டுகிறது. இது கர்த்தருடைய மேஜையில் புசித்து பானம் பண்ணுவதை காட்டுகிறது. கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசத்தினால் தேவனின் இறுதி நியாயத்தீர்ப்பில் நாம் பாதுகாக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம்.

தற்பொழுது ஒவ்வொருமுறையும் கர்த்தருடைய மேஜையில் பங்கு பெறும்பொழுது, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய கிரியைகளை மீட்டுப் பார்க்கிறோம். (1 கொரி *11:23-26*). இது ஜனங்களின் இரட்சிப்புக்கு முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது.

**புளிப்பில்லா அப்பப்பண்டிகை (உபா *16:3, 23:6*)**

நிசான் மாதம் **15** ம் தேதி தொடங்கி ஏழு நாட்கள் இப்பண்டிகை ஆசரிக்கப்படுகிறது, இது தேவனுடைய பராமரிப்பு, ஐக்கியம் இவைகளை வருணிக்கிறதாய் இருக்கிறது. எகிப்தைவிட்டு துரிதமாய் புறப்பட்டகாரணத்தால் அப்பம் புளிக்கவில்லை. அதனுடன் பருகும் திராட்சை ரசமும் கூட புளிப்பற்றதுமாக இருந்தது. இப்பண்டிகையின் போது திராட்சைரசம் கொதிக்கவைத்து பருகப்பட்டது.

புளித்தமா வேதாகமத்தில் தீங்கு மற்றும் துர் உபதேசதத்தைக்குறிக்கிறது, தேவன் புளித்த மாவை அகற்றுங்கள் என்பது தீங்கை உங்கள் நடுவிலிருந்து அகற்றுங்கள் என்பதற்கு அடையாளமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது. வேதாகமத்தில் பல நிலையில் புளித்தமா குறிப்பிடப்பட்டுள்ளது:

- சதுசேயரின் புளித்தமா - மனுஷீக நிலையில் காண்பது (மத் 16:6)
- பரிசேயரின் புளித்தமா - சடங்காச்சாரம் (மாற்கு 8:15)
- ஏரோதின் புளித்தமா - உலகப்பிரகாரம் (மாற்கு 8:15)
- கொரிந்தியரின் புளித்தமா - ஒழுக்க சீர்கேடு (1 கொரி 5:6, 7)
- கலாத்தியரின் புளித்தமா - சட்ட ஒழுங்கை கண்டிப்புடன் கைக்கொள்ளுதல் (கலாத்தியர் 5:9).

புளிப்பற்ற அப்பம் கிறிஸ்துவின் பூரணத்தைக்காட்டுகிறது. (லேவி2:11). இது ஒரு விசுவாசியின் கிறிஸ்தவ நடக்கையைக்காட்டுகிறது. புளிப்பில்லா அப்பம் சுடப்படும் போது அதில் வரிகள் காணப்படும் மற்றும் துவாரங்கள் காணப்படும். அவரது தழும்புகளால் குணமாகிறோம் (ஏசா 53:5) அவரைக்குத்தினவர்கள் அவரை நோக்கிப்பார்ப்பார்கள். (சக 12:10)

**முதற்பலன்கள் (லேவி 23:9-14).**

இப்பண்டிகை எப்பொழுதும் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறுகிறது. நிசான் மாதம் 16 ம் தேதியில் இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது. இப்பண்டிகை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை சித்தரிக்கிறது. மற்றும் இப்பண்டிகை புளிப்பில்லா அப்பப் பண்டிகையின் மத்தியில் இடம் பெறுகிறது.

**நித்திரையடைந்தவர்களில் முதற்பலனாக கிறிஸ்து இருக்கிறார். (1 கொரி 15:20).** பஸ்கா பண்டிகையின்போது மரித்த இயேசுகிறிஸ்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேறின இஸ்ரவேலர்கள் மூன்றாம் நாளில் சிவந்த சமுத்திரத்தை கடந்தனர். இது விசுவாசியின் உயிர்த்தெழும் சரீரத்தை பிரதிபலிக்கிறது.

**பெந்தெகொஸ்தே பண்டிகை (லேவியராகமம் 23:15-21)**

பென்டே (Pente) - ஐம்பது - இப்பண்டிகை எப்பொழுதும் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் நிகழ்கின்றது, முதற்பலன்களை சேர்க்கும் பண்டிகையிலிருந்து ஐம்பதாவது நாளில் இப்பண்டிகை ஆசரிக்கப்படுகிறது. (லேவி. 23:15). கி.பி. 70 ல் சரித்திரபூர்வமாய் யூதர்கள் இந்நாளில் சிதறடிக்கப்பட்டனர். இதன் பின்னர் அவர்கள் இப்பண்டிகையை ஆசரிக்கமுடியாமல் வெகுகாலம் தங்கள் தேசத்திற்குப் புறம்பே இருந்தனர். கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட வருஷத்தில், கொண்டாடப்பட்ட பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது, எருசலேமில், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்துடன் சபையுகம் ஆரம்பமானது. (அப் 2:1-4). பெந்தெகொஸ்தே பண்டிகை நாளில் 3,000 பேர் மறுபடி பிறந்தனர்.

**எக்காளப்பண்டிகை (லேவி 23:23, 24)**

இப்பண்டிகை ஏழாம் மாதமான ஏத்தனீம் மாதம் முதலாம் திகதி கொண்டாடப்படுகின்றது. எக்காளம் ஊதப்படுவது ராஜா வருவதை குறிக்கிறது. இது யூதர்களின் புதிய வருடப்பிறப்பின் நாள்.

இது சபை எடுத்துக்கொள்ளப்படும் நாளில் இயேசுகிறிஸ்து தனது சபைக்காய் திரும்ப வருவதைக் குறிக்கிறது. இது யூதர்களுடன் தேவன் திரும்ப உறவுகொள்ளும் நாள் என யூதர்கள் உணருவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிராயச்சித்தப்பண்டிகை (லேவி 23:26-32).**

எக்காளப்பண்டிகைக்குப் பத்து தினங்களுக்குப் பின்னர், இப்பண்டிகை இடம்பெறுகிறது. விசுவாசிக்கும் யூதர்கள் மட்டும் ஆயிரவருட ஆளுகையில், பிரவேசிப்பார்கள் என இது பிரதிபலித்துக்காட்டுகிறது.

இக்காலப்பகுதியில், கோதுமை மற்றும் பதர், செம்மறி மற்றும் வெள்ளாடு வேறுபிரிப்பு இடம் பெறும். அவிசுவாசிகள் அக்கினி ஞானஸ்நானம் பெறுவர். (மத் 3:11,12.). விசுவாசிகள் ஆயிரவருட ஆளுகையில் பிரவேசிப்பர். இப்பண்டிகை நாளில் பிரதான ஆசாரியன் கையிலிலுள்ள பாத்திரத்தில் இரத்தத்துடன், மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பான். தனக்காக ஒருமுறையும், தேசத்திற்காக ஒரு முறையும் பிரவேசிப்பான். (எபி 9:6-7). அவனது பிரவேசம் கிறிஸ்துவின் தியாக பலியை பிரதிபளிக்கிறது.

**கூடாரப்பண்டிகை (லேவி 23:33-36).**

இப்பண்டிகை பிராயச்சித்தப்பண்டிகை முடிந்த ஐந்து நாட்களுக்குப் பின்னர் இடம்பெறும். ஒரு வாரமளவும் கொண்டாடப்படும். இது இயேசுகிறிஸ்துவின் ஆயிரவருட ஆளுகையை பிரதிபலிக்கிறது. பூரணமான நன்மைகளும், சூழலும் அளிக்கப்படும். (உபா 16:13-15, ரோமர் 8:19-22).

தேவனின் பூரணமான நன்மைகளை அருளும் இருபண்டிகைகள் ஆர்வமூட்டக்கூடியதாய் இருக்கிறது. புளிப்பில்லா அப்பப்பண்டிகை, கூடாரப்பண்டிகை மற்றப் பண்டிகைகள் யாவும் ஒரே நாளும், இப்பண்டிகைகள் ஏழு நாளும் ஆசரிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- *பஸ்கா பண்டிகை: கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பஸ்கா தினத்தில் நிறைவேறியது கி.பி. 32.*
- *புளிப்பில்லா அப்பப் பண்டிகை: புளிப்பில்லா அப்பப்பண்டிகைநாளில் கிறிஸ்து அடக்கம்பண்ணப்பட்டபோது நிறைவேறியது கி.பி. 32*
- *முதற்பலனை சேர்க்கும் பண்டிகை: முதற் பலனை சேர்க்கும் நாளில் கிறிஸ்து உயிர்த்தெழுந்த போது நிறைவேறியது. கி.பி 32.*
- *பெந்தெகொஸ்தே பண்டிகை: யூதர்களின் யுகம் நிறைவடைந்த பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது. கி.பி 32.*
- *எக்காளப்பண்டிகை: சபை எடுத்துக்கொள்ளப்படும்போது நிறைவேறும்.*
- *பிராயச்சித்தப்பண்டிகை: கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நிறைவேறும்.*
- *கூடாரப்பண்டிகை: கிறிஸ்துவின் ஆயிரவருட ஆளுகையின் போது நிறைவேறும்.*

*பவுல் முதல் நான்கு பண்டிகைகளும் எட்டு வாரகாலங்களில் கி.பி. 32 ல் எழுத்தின்படி நிறைவேறியதை கண்டவராய் இருக்கிறார். **"சபை எடுத்துக் கொள்ளப்படும் சந்ததியில்"** மற்ற பண்டிகளும் நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை. (1 தெச 4:13-18, 2 தெச 2:1).*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# மணவாளன் மணவாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணவாளன் இயேசு

**அவர் வார்த்தையாக இருக்கிறார். யோவான் 1:1-5,14.**

**வரலாற்றுக்குறிப்பு**

இயேசு தேவனாய் இருந்து நித்திய காலமாய் பிதாவுடனும் பரிசுத்த ஆவியானவருடனும் இணைந்து இருந்தார். (யோவான் 1:1-5) ஜனங்களுக்காக மனிதனாய் பிறந்த இயேசுகிறிஸ்து, பரிசுத்த ஆவியானவரால் கர்ப்பந்தரிக்கப்பட்டார். (மத் 1:20) யூதகுல கன்னிகையான மரியாளிடத்தில் (மத் 1:18) பெத்லகேம் என்னும் ஊரில் பிறந்தார். யோசேப்பும், மரியாளும் தாவீதின் வம்சா வழியில் வந்தவர்கள், அதாவது சாலமோன் மற்றும் நாத்தான் மூலம் அவர்களது வம்சா வழி பிரிகிறது. எட்டாம் நாளில் விருத்த சேதனம் செய்யப்பட்டார். அவர் அறிவிலும் கிருபையிலும் வளர்ந்தார். அவரது உறவின் முறையான யோவான் ஸ்நானகனால், யோர்தான் நதியில், அவரது ஊழிய துவக்கத்தில் ஞானஸ்நானம் பெற்றார். (மத் 3:13-17) அதன் பின்னர், அவர் வனாந்திரத்திற்குச் சென்று பிசாசானவனால் (சோதனைக்காரனால்) சோதிக்கப்பட்டார். (மத் 4:1-11) அதைத்தொடர்ந்து மூன்று வருடங்கள் பாலஸ்தீனாவை சுற்றி நடந்து, வியாதிப்பட்டோரை குணமாக்கி, பிரசங்கம் செய்து, ஆறுதல் படுத்தி, தேவனண்டை திரும்பிய அனைவருக்கும் பரலோக இராஜ்யத்தின் சுவிசேஷத்தை பூமியிலே பரவச் செய்தார். பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ் ஸ்காரியோத் என்பவனால் காட்டிக்கொடுக்கப்படடார். சிலுவையின் மீது பஸ்கா தினத்தன்று. தனது ஜீவனைக் கொடுத்து இரட்சிப்பை உறுதிப்படுத்தினார். தேவன் இயேசுகிறிஸ்துவை, மூன்றாம் நாளாகிய, முதற்பலனை சேர்க்கும் அந்நாளில் உயிருடன் எழுப்பினார். அவர் ஒலிவமலையில், பஸ்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிகைக்கு பத்து தினங்களுக்கு முன்னர் பரமேறிச்சென்றார். (அப் 1:8-11). பரலோகில் பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து கொண்டு நமக்காய் பரிந்து பேசவும், அவரது சத்துருக்களை பாதபடியாக்கி போடவும் காத்துக்கொண்டு இருக்கிறார். இயேசுகிறிஸ்து, தனது பரிசுத்தவான்களுடன் 1000 வருடம் அரசாள பூமிக்குத்திரும்புவார். (வெளி 20:1-6) அவிசுவாசிகளை இறுதி நியாயத்தீர்ப்பில் நியாயந்தீர்ப்பார் (வெளி 20:11-15). விசுவாசிகள் தங்களது நித்தியத்தை இயேசுகிறிஸ்துவுடன் கழிப்பர்.

**தீர்க்கதரிசியான மணவாளன்**

மோசேயால் முன்னுரைக்கப்பட்ட பூரணமான வரவேண்டிய தீர்க்கதரிசி, இயேசுகிறிஸ்துவில் நிறைவேறிற்று. (உபா 18:15-1 அப் 3:20-23). தான் தீர்க்கதரிசி என்பதை இயேசுகிறிஸ்து எடுத்துக்கூறியிருக்கிறார். (யோவான் 7:16, 8:28, 12:49-50)

முன்னுரைத்தவைகளின் நிறைவேறுதல்

- அவரது மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் (மத்16:21, யோவா2:19)
- எருசலேமின் அழிவு (மத் 24:1-2, லூக் 19:41-44)
- புறஜாதியார் இஸ்ரவேலரை ஆளுதல் (லூக் 21:20-24)
- யூதர்கள் சிதறிக்கப்படுதல் (மத் 24:34)
- தேவனுடைய வார்த்தை ஒருபோதும் அழியாது (மத் 24:35)

**ஆசாரியரான மணவாளன்**

ஆசாரியன் ஒருமனிதனாயிருந்து தேவனுக்கு முன்னதாக மற்றமனிதனின் பிரதிநிதியாக செயல்படுகிறவன், இதினிமித்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவமனிதன் பரிசுத்த தேவனுடன் உறவு கொள்ள முடியும். (எபி 5:1) ஜனங்களின் பாவத்திற்காக பாவநிவிர்த்தி செய்வது ஆசாரியனே ( எபி2:17, எபி 10:12) மற்றும் ஜனங்களுக்காக பரிந்துபேசுவதும் ஆசாரியனே. இயேசுகிறிஸ்து பிரதான ஆசாரியராய் இருந்து, பூரணமான தியாக பலியாகிய தனது சொந்த சரீரத்தை, ஜனங்களின் பாவநிவிர்த்திக்காய் தேவனுக்கு அர்ப்பணித்தார். (எபி 9:26). அவர் நமக்காக பரிந்து பேசும் ஜெபத்தை பிதாவின் வலது பக்கத்திலிருந்து ஏறெடுக்கிறார். (எபி 7:23-25) நாம் இயேசுகிறிஸ்துவின் சரீரத்தில் இணைக்கப்பட்டுள்ள படியால், ஒவ்வொரு விசுவாசியும் ஒரு ஆசாரியனாகிறான் (1 பேதுரு 2:9). நாம் கிறிஸ்துவுக்குள்ளாக பிதாவாகிய தேவனுடன் நேரடித் தொடர்பு உள்ளவர்களாயிருக்கிறோம். (மத் 27:51, எபி 4:16). இதினிமித்தமே நமது சரீரத்தை ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் எனப்பார்க்கிறோம். (ரோமர் 12:1) துதி ஏறெடுக்க வேண்டும். (எபி 13:15) கொடுத்தல் (எபி 13:16) மற்றும் கீழ்ப்படிதல் அவசியம் (எபி 13:17)

**ராஜாவாகிய மணவாளன்**

இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவர் ராஜாவாக, ஆளுகிற ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாய் வருவார். (1 தீமோ 6:15). அவரது இராஜ்யம் பூமியில் இருக்கும் (எரேமியா 23:5, வெளி 19:11-16). இராஜ்யத்தின் தலைநகரமாக எருசலேம் விளங்கும். (சங் 2:6). அதன் வியாபகம் முழு உலகமும் (சங் 72:6-11, ஏசா 2:2-3, தானி 7:13-14, சக 8:20-23) இருக்கும்.

**ஆட்டுக்குட்டியான மணவாளன்**

**1. ஆபேலின் பலி - ஆதியாகமம் 4:3-5**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆபேல் தனது மந்தையிலிருந்து பலியை கொண்டு வந்தான்.

**2. ஆபிரகாமின் பலி - ஆதியாகமம் 22:7-14.**

- ஈசாக்கிற்கு பதிலாக ஆபிரகாமுக்கு ஒரு ஆட்டுக்கடா அளிக்கப்பட்டது. இதில் பதிலாகுதல் வலியுறுத்தப்படுகிறது. ஆட்டுக்குட்டி ஒரு நபரின் காணிக்கையாய் இருக்கிறது.

**3. யாத்திராகமம் 12:3-7**

- ஆட்டுக்குட்டி அடிக்கப்பட வேண்டும். இதில் பாதுகாப்பு வலியுறுத்தப்படுகிறது. ஆட்டுக்குட்டி ஒரு குடும்பத்திற்கான காணிக்கையாய் இருந்தது.

**4. லேவியராகமம் 1:10-13, 16:15.**

- பழுதற்ற ஆட்டுக்குட்டி என்று ஆட்டுக்குட்டியின் தன்மை வலியுறுத்தப்பதுகிறது. ஆட்டுக்குட்டி இஸ்ரவேல் தேசத்திற்கான காணிக்கையாகவும் இருந்தது.

**5. ஏசா 53:4-8**

- ஆட்டுக்குட்டிக்குப்பதிலாக ஒரு நபர் அளிக்கப்படுவதை காட்டுகிறது. ஈடுசெய்தல் வலியுறுத்தப்படுகிறது.

**6. யோவான் 1:29.**

- அந்த ஆட்டுக்குட்டி இயேசுவாய் இருந்ததைக் காட்டுகிறது. தனிப்பட்டவரது இரட்சிப்பு வலியுறுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ஆட்டுக்குட்டி முழு உலகத்திற்கான காணிக்கையாய் இருந்தது.

**7. அப் 8:30-37.**

- இயேசுவே கிறிஸ்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா எனக்காட்டுகிறது. இங்கு தனிப்பட்டவரது இரட்சிப்பு வலியுறுத்தப்படுகிறது. யாரெல்லாம் விசுவாசிக்கிறார்களோ அவர்களுக்குரியதாக இருந்தது.

**8. 1 பேதுரு 1:18-21.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- ஆட்டுக்குட்டியின் உயிர்த்தெழுதலைக் காட்டுகிறது. மீட்பு வலியுறுத்தப்படுகிறது. ஆட்டுக்குட்டி எல்லா சந்ததிக்கும் உரிய பலியாய் இருந்தது.

**9. வெளி 5:6-10.**

- ஆட்டுக்குட்டியானவரின் மகிமைப்படுதலைக் காட்டுகிறது. ஆட்டுக்குட்டியானவரின் அரசாங்கம் (ஆளுகை) வலியுறுத்தப்படுகிறது. அவரே சர்வலோகத்தின் ஆட்டுக்குட்டி.

**10. வெளி 22:1-5** ஆட்டுக்குட்டியின் நித்திய அரசாளுகையை காட்டுகிறது.

- ஆட்டுக்குட்டியின் நித்திய மகிமை வலியுறுத்தப்படுகிறது.
- எல்லா நித்தியத்திற்குமுரிய ஆட்டுக்குட்டி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில், தங்களது நிர்வாணத்தை மூட அத்தி இலைகளால் தங்களுக்கு ஆடைகளை உண்டுபண்ண தலைப்பட்ட சமயம், தேவன் அவர்களுக்கு தோலை அவர்கள் நிர்வாணத்தை மூட ஆடைகளாய் கொடுத்தார். ஆபேல் ஏற்றுகொள்ளப்படத்தக்க பலியை மந்தையிலிருந்து கொண்டு வந்தார்.

பலியின் அவசியம் நோவாவுடன் ஜலப்பிரளயத்திற்குப் பின்னும் தொடர்ந்தது. (ஆபிரகாம் ஈசாக்கைப்பலி செலுத்தினது) பஸ்கா ஆட்டுக்குட்டி பலி மட்டுமல்ல லேவியர்களின் அனுதின காணிக்கையாக இரத்த பலி ஏற்படுத்தப்பட்டது.

இரத்தத்தை எவ்விதத்திலும் புசிக்கக்கூடாது என்பது தேவன் இஸ்ரவேலருக்கு கொடுத்த காரியமாகவும் இருந்தது. மோசே இதைக்குறித்து கூறும்பொழுது, " மாம்சத்தின் உயிர் இரத்தத்திலிருக்கிறது. பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாவிற்கு பிராயச்சித்தம் செய்வது இரத்தமே." மேற்கூறியவை மூலம் அறியாமையுள்ள ஜீவன் (மிருகபலி) ஒரே தரம் எல்லோருக்காகவும் கிரயம் செலுத்தி உண்மை பலியாக செலுத்தப்பட்ட இயேசுகிறிஸ்துவின் தியாக பலியின் வரை அது நிழலாகவே இருந்துவந்தது.

முற்றிலும் அவசியப்பட்ட, தனித்தன்மை வாய்ந்த இயேசுகிறிஸ்துவின் தியாக பலி "கிறிஸ்துவின் இரத்தம்" மூலம் குறிப்பிடப்படுகிறது. (ரோமர் ***3:25***, எபே ***1:7*** , எபி ***9:22***)

எல்லோருக்காகவும் ஒரேதரம் பலியிடப்பட்ட இயேசுகிறிஸ்துவின் தியாகபலி வரை விசுவாசிகளின் பாவங்கள் அவர்கள் அருகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுக்கப்பட்டு வந்தன. சிலுவை மரணத்திற்குப்பின்னர், அவைகள் அனைத்தும் முற்றிலுமாய் எடுத்துக்கொள்ளப்பட்டன.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் பன்னிரெண்டு கிருபையின் ஆதாரங்கள் உள்ளடங்கியுள்ளது.

1. புதிய உடன்படிக்கை (எபி 8:8, 9:20-21)
2. ஜீவனாயிருக்கிற இரத்தம் (யோவான் 6:53)
3. கிரயம் கொடுத்து வாங்கப்படுதலும், மீட்பும் (அப்20:28, எபே 1:7, 1பேதுரு1:18-19)
4. திருப்திபடுத்துதல் (ரோமர் 3:25)
5. நீதிமானாக்குதல் (ரோமர் 5:9)
6. பரிசுத்தப்படுத்துதல் (எபி 13:12)
7. சுத்திகரித்தல் ( எபி 9:14, 1 யோவான்1:7, வெளி 7:14)
8. ஜெயம் (வெளி 12:11)
9. தெளிக்கப்பட்ட இரத்தம் (எபி 10:22, 1பேதுரு 1:2)
10. அருகில் சேர்த்தல் (எபே 2:13)
11. சமாதானம் (கொலோ 1:20)
12. உள்ளே பிரவேசிக்கும் தைரியம் (எபி 10:19)

## மணவாட்டி சபை

கிறிஸ்துவின் சரீரம் சபை யுகத்தில் பூமியில் வடிவமைக்கப்படுகிறது. (எபே 1:22-23, 2:16, 4:4-5, 5:23, கொலோ 1:18, 1:24, 2:19). சபை யுகத்தில், கிறிஸ்துவின் சரீரத்தில் சேரவேண்டிய அனைத்து விசுவாசிகளும் சேர்க்கப்பட்டு கிறிஸ்துவுடன் இணையும் போது முழுமை அடைகிறது. (1 கொரி 12:12-14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சபை என்பதன் "எக்ளீசியா' என்ற கிரேக்கச்சொல்லின் மூல அர்த்தம் ("வெளியே அழைக்கப்பட்ட ஒருவர்"). சபை கூறப்பட்ட பிரகாரம் ஓர் இரகசியம் (எபே 3:1-6, கொலொ 1:25,26, ரோமர்16:25,26). இரகசியம் என்பது பழைய ஏற்பாட்டில் மறைக்கப்பட்டு, இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மணவாட்டி சபை பெந்தெகொஸ்தே நாளில் துவங்கியது. சபை எடுத்துக்கொள்ளப்படும் நாளில் பூமியிலிருந்து அகன்று போகும். (1 தெச 4:17)

சபை யுகத்தில் உள்ள விசுவாசிகள், பழைய ஏற்பாட்டில் இல்லாத ஆவிக்குரிய நன்மைகளைப் பெற்று இருக்கிறார்கள். ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவுடனும், அவரது சரீரத்திலும் இணைக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு விசுவாசியிலும் இயேசுகிறிஸ்து வாசம் பண்ணுகிறார். பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு விசுவாசியிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசம் பண்ணுகிறார். ஒவ்வொரு விசுவாசியும் ஆசாரியனாய் செயல் பட்டு, ஜெபித்து, தேவனுக்கு நேரடி பணிவிடைக்காரராய் இருக்கிறார்கள்.


நாம் முழு வேதாகமத்தையும் பெற்று இருக்கிறோம். விசுவாசிகள் நியாயப்பிரமானத்தினால் அல்ல பரிசுத்த ஆவியானவர் மூலம் வாழ கட்டளைப் பெற்றுள்ளனர். ஒவ்வொரு கிறிஸ்துவுக்குள்ளானவர்களும் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகளாக இருக்கின்றார்கள்.

**சபை இஸ்ரவேலுக்கு வேறு விதமாய் இருக்கிறது.**

இஸ்ரவேலரின் ஆரம்பம் ஆபிரகாமிலிருந்து தொடங்குகியது. (ஆதி *12:1-3*) சபையின் ஆரம்பம் பெந்தெகொஸ்தே நாளிலிருந்து தொடங்குகியது (அப் *2*, கலா *3:26-28*). இஸ்ரவேல் பூமியின் மீது வாக்குத்தத்த ஆசீர்வாதங்களாய் இருந்தது (உபா *28:1-14*) சபையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உன்னதங்களில் வாக்குத்தத்த ஆசீர்வாதங்களாய் இருக்கிறது. (எபே 1:3, எபி 3:1). இஸ்ரவேலருக்கு தேவனுடன் இருந்த உறவு உடன்படிக்கையை அடிப்படையாகக் கொண்டு இருந்தது (ஆதி 17:7,8) சபைக்குரிய தேவனோடுள்ள உறவு மறு பிறப்பை அடிப்படையாக் கொண்டு இருக்கிறது. (யோவா 1:12-13, 1 பேது 1:23). இஸ்ரவேலரைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் முக்கியமாக பழைய ஏற்பாட்டில் இருக்கிறது. சபையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் மட்டும் இருக்கிறது. இஸ்ரவேலர் எருசலேமில் ஆராதித்தனர் (சங் 122:1-4) இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் எங்கு இரண்டோ மூன்றோ பேர் கூடுகிறார்களோ அங்கு சபை ஆராதனை நடைபெறுகிறது. (மத் 18:20)

இஸ்ரவேலர் நியாயப்பிரமாணத்திற்கு கீழாக வாழ்ந்தனர். (எசே 20:10-12) சபை கிருபைக்கு கீழாக இருக்கிறது (யோவான் 1:17 ரோமர்6:14). இஸ்ரவேலரின் முடிவு பாலஸ்தீனாவிலேயே இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஏசா 60:18-21) சபை பூமியிலிருந்து அகற்றப்படும். (1 தெச 4:13-18). இஸ்ரவேலருக்கு கிறிஸ்துவே ராஜாவும், மேசியாவுமாய் இருக்கிறார். கிறிஸ்துவே சபைக்கு தலையும், **மணவாளனுமாய்** இருக்கிறார்.

**மணவாட்டியின் சகோதரத்துவம்**

எல்லா விசுவாசிகளும், சகோதரர்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது, கிரேக்க வார்த்தை இதன் பொருளை குடும்ப உறவுடன் சுட்டிக்காட்டுகிறது. இதில் ஆணும் பெண்ணும் அடங்குவர். ஒரே குடும்பத்தைச்சார்ந்த அங்கத்தினராய் நித்திய காலமாய் சேர்ந்து ஆளக்கூடிய மகா பெரிய முக்கியத்துவம் விஷேசித்த தைரியத்தை அளிக்கிறதாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட நடத்தை தெய்வீக அன்பினால் (அகாப்பே அன்பு) மட்டுமே சாத்தியம். (1 பேதுரு 2:17, 3:8, 1 யோவான் 3:23, 4:12)

நாம் நமது சகோதர்களின் காப்பாளர்கள், நாம் அவர்களுக்கு எவ்விதத்திலும் தடைகல்லாயிராது, அவர்களது நன்மை கருதி எப்பொழுதும் கவனத்துடனும், துடிப்புடனும் அவர்களுக்காய் செயல்பட வேண்டும். (ஆதி 4:9 யாக் 5:20, 2 தெச 3:15) சில சூழ்நிலைகளில் ஒருவர் மற்றவரை தவறாய் வழிநடத்தும் அபாயம் இருக்கிறது இதினிமித்தம், ஒழுங்கும், கட்டுப்பாடும் மிக அவசியமாய் இருக்கிறது. (1 கொரி 5:11) நமது குடும்பத்தில், மன்னிப்பதற்குரிய ஆயத்தம் இருப்பது அவசியம். (மத் 18:21). இவ்வுலகம், தீமைக்கும் பாவத்திற்குமே சகோதரத்துவம் சொந்தம் பாராட்டுகிறது. (யோவான் 15:19)

ஒருவரின் ஆத்துமாவும், அவரில் காணப்படும் கனியும் அவர் எந்த குடும்பத்தை சார்ந்தவர் என தீர்மானிக்கிறது. (மத்12:33). நாமனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாமின் குடும்பத்தில் பிறந்தோம். (1 கொரி 15:22). நாம் பாவத்தில் தரித்து இருக்கவேண்டும், அல்லது கர்த்தரின் குடும்பத்தில் அங்கமாய் மாறவேண்டும் (யோவான் 8:42-44)

**மணவாட்டி இப்படியான உடைகளால் தன்னை உடுத்துக் கொள்ளல் வேண்டும்**

1. இரட்சிப்பின் வஸ்திரம் (ஏசா 61:10)
2. நீதியின் சால்வை (ஏசா 61:10)
3. துதியின் ஆடை (ஏசா 61:3)
4. பரிசுத்தமென்னும் அலங்கார வஸ்திரம் (52:1)
5. விசுவாசமென்னும் பொற்சரிகை (சங் 45:13)
6. சோதிக்கப்பட்டு ஜெயம் கொள்ளும் சித்திரத்தையலாடை (சங் 45:14)
7. நீதியின் வஸ்திரம் (வெளி 19:8)

கிறிஸ்துவின் சரீரம் முழுமையடையும் போது, சபை எடுத்துக்கொள்ளப்படுதல் சம்பவிக்கும். (1 தெச 4:16-18, 1கொரி 15:51-7. வெளி 19:6-8, சக13:2 மற்றும் 1தெச 3:13)

இப்படிப்பட்டதான மணவாட்டி வெற்றி வாகை சூடப்பட்டு, கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவருடன் பூமிக்குத் திரும்புவாள் (1 தெச 3:13). பூமிக்குத் திரும்பிய மணவாளன் மற்றும் மணவாட்டியினால் நியாயத்தீர்ப்பு நடைபெரும் (சங் 110:1) பின்னர் பிசாசுகள் ஆயுதமிழக்கும். (கொலோ 2:15) சாத்தான் 1000 ஆண்டுகள் சிறைவைக்கப்படுவான். (வெளி 20:1-3). இயேசுகிறிஸ்து பிசாசுகளை சிறையில் தள்ளுவார். (சக 13:2, கொலோ 2:15, 1 கொரி 15:24,25)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணவாளனாகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகின் ராஜாவாக முடிசூடப்பட்டு, ராஜரீகம் செய்வார். (வெளி 19:6)

பின்னர் ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்து நடக்கும் (வெளி 19:7-9) கலியாணம் பரலோகில் நடந்தது, கலியாண விருந்து பூமியில் நடக்கும். (மத் 25:1-13)

## விவாகம்

கலியாணத்திற்கு ஆளத்துவம் மற்றும் வாழ்க்கை இவ்விரண்டும் அவசியமாய் இருக்கிறது. இதினிமித்தம் விவாகம் மனிதனுக்கு மட்டுமே பொருந்தக்கூடியதாய் இருக்கிறது. விவாகம் மனித வர்க்கத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள தனிப்பட்ட உறவை காட்டுகிறது, மற்றும் இது கிறிஸ்துவுக்கும் விசுவாசிக்கும் இடையே உள்ள இரட்சிப்பின் உறவுக்கு ஒப்பணையாய் இருக்கிறது. **"நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள்"** என தேவன் மனிதனுக்கு கட்டளை கொடுத்தார். இது மனிதன் மிருக இராஜ்யத்தை கீழ்ப்படுத்தி, அதை ஆண்டுகொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

விவாகம் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையே உள்ள உறவின் ஒப்பனையாய் இருக்கிறது.

தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள். **மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும். தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனுமில்லையே. கர்த்தர் சபையைப் போஷித்துக்காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது. நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன். மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள். (எபே *5:21-33*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# இஸ்ரவேல்

# கலியாண முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்ரவேல் கலியாணங்கள் பற்றிய நடைமுறை விளக்கங்களை நாம் இரண்டு கட்டங்களாக எடுத்துக் கொள்வோம்.

முதல் கட்டம் "கெட்ருபா" (Ketubah) என்னும் நிச்சயம் பண்ணுதல். இது மூன்று படிகளில் நிகழும்.

**1. மணவாட்டிக்கு மணவாளனால் தோரா (Torah) உடன்படிக்கை கொடுக்கப்படும்.**

இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள். பூமியெல்லாம் என்னுடையது. *(யாத் 19:5)*

**2. மணவாட்டி அதனை அங்கிகரிப்பாள்.**

அதற்கு ஜனங்கள் எல்லாரும் ஏகமாய், கர்த்தர் சொன்னவைகளையெல்லாம் செய்வோம் என்று பிரதியுத்தரம் சொன்னார்கள். *(யாத் 19:8)*

**3. பின்னர் மணவாட்டி தன்னை சுத்திகரித்து, பரிசுத்தப்படுத்தி தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளுவாள்.**

பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஜனங்களிடத்தில் போய், இன்றைக்கும் நாளைக்கும் அவர்களைப் பரிசுத்தப்படுத்து. அவர்கள் தங்கள் வஸ்திரங்களைத் தோய்த்து, மூன்றாம் நாளைக்கு ஆயத்தப்பட்டிருக்கக்கடவர்கள். *(யாத் 19:10-11)*

மணவாளன் தனது தந்தையின் வீட்டிற்கு சென்றவராக தன்னை அவர் அலங்கரித்துக் கொள்ளுவார். மணவாட்டியும் தன்னுடைய அலங்கரிப்பினாலும், தன்னுடைய பரிசுத்தப்படுதலாலும் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக் கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக் கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார். (ஏசா 61:10)***

***ஒரு பெண் தன் ஆபரணத்தையும், ஒரு மணவாட்டி தன் ஆடைகளையும் மறப்பாளோ? என் ஜனங்களோ எண்ணிமுடியாத நாட்களாய் என்னை மறந்துவிட்டார்கள். (எரே 2:32)***

***உன் கண்களை ஏறெடுத்துச் சுற்றிலும் பார். அவர்களெல்லாரும் ஏகமாய்க்கூடி உன்னிடத்தில் வருகிறார்கள். நீ அவர்களெல்லாரையும் ஆபரணமாகத் தரித்து, மணமகள் அணிந்துகொள்வதுபோல, நீ அவர்களை அணிந்துகொள்வாய் என்று, என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தர் உரைக்கிறார். (ஏசா 49:18)***

இரண்டாவது படி "ஹப்பா" (Huppah) என்னும் கலியாண நிகழவாக நிகழ்ந்தேறும். இந்த கலியாண நிகழ்வில் மணவாளன் தன்னுடைய மணவாட்டியை உத்தியோகபூர்வமாக தன்னுடையதாக மாற்றிக் கொள்ளுவார். இதற்காக சிறிய "கனோபி" வடிவிலான கூடாரத்தினை வடிவமைத்து அந்த கூடாரத்தினுள் மணவாளனும், மணவாட்டியும் இணைந்து கொள்ளுவார்கள்.

## இஸ்ரவேல் கலியாணம்

கிறிஸ்துவின் காலத்தில், கலியாணம் மணமகனின் தந்தையால் ஒழுங்குசெய்யப்படுவதாய் இருந்தது. இவ்வொற்றுமையில் கிறிஸ்துவுக்கும் மனுக்குலத்திற்கும் உள்ள உறவு பரிசீலனை செய்யப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணவாட்டியின் தேர்வு**

புராதன இஸ்ரவேல் தேசத்திலே மணவாட்டியை மணவாளனின் தந்தையே தேர்வு செய்வார். தந்தை தனது மிக நம்பிக்கை உள்ளதான வேலையாளை அனுப்பி மணவாட்டியை தேடிக் கண்டுபிடிக்கும் பொறுப்பதனை நிறைவேற்றுவார். (எபி 2:13).

இதற்கு தலைசிறந்த உதாரணத்தை நாம் ஆதியாகமம் 24 ஆம் அதிகாரத்தில் நாம் காணமுடியும். ஆபிரகாம் தனது மகனான ஈசாக்கிற்கு மணவாட்டியை தேடும் பொறுப்பதனை தனது வேலையாள் எலியேசருக்கு ஒப்படைக்கின்றான். இது ஆபிரகாம்ம பிதாவின் நிழலாகவும், ஈசாக்கை மேசியாவின் நிழலாகவும் எலியேசரை பரிசுத்த ஆவியின் நிழலாகவும் கருத இயலும். மேலும் திருச்சபையை ரெபேக்காளின் நிழலாக கருதலாம்.

***"இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது, உலகத்தின் முடிவு காலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாகும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1கொரிந்தியர் 10:11)***

இவை சபையாகிய நமக்கு முக்கியம் வாய்ந்த திருஷ்டாந்தமாகவும் நிழலாகவும் இருக்கிறது. ஆபிரகாம் தன் ஒரே குமாரனான ஈசாக்குக்கு மணவாட்டியை தேர்ந்தெடுக்க ஆட்களை அனுப்பினதுபோல, இன்றும் ஒரு மணவாட்டியை தேர்ந்தெடுப்பதற்கான பரீட்சை நடந்து கொண்டிருக்கிறது.

இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபை தேர்வு செய்யப்படும் விதத்தை திருஷ்டாந்தத்தில் உள்ள பல்வேறு நிழல்களைப் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆபிரகாம் -** பிதாவாகிய தேவனை நிழலாக பிரதிபலிக்கிறார். இது தேவன் தன் ஒரே பேரான குமாரனை இவ்வுலக இரட்சிப்பிற்காக கொடுத்தது போல் (யோவான் *3:16*), ஆபிரகாமும் தன் ஒரே குமாரனை பலிசெலுத்த ஒப்புக்கொடுத்தார்.

**ஈசாக்கு -** தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக் குறிக்கிறார் (யோவா *1:18*)

**எலியேசர் -** இவர் ஆபிரகாமின் பிரதான ஊழியக்காரன். தேவனும் அவ்வாறே தம் பணிகளை நிறைவேற்றுவதற்கு சில ஊழியக்காரர்களை நியமித்திருக்கிறார். ஊழியக்காரர்கள் என்றுமே தங்கள் சுய கருத்துக்களைக் கூற முடியாது. அவ்வாறே தேவனுடைய ஊழியக்காரர்களும் சுய கருத்துக்களை கூற இயலாது.

இதைக்குறித்து யோவான் *16:13* சொல்லுகின்றது **'சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தான் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்"**

இன்று சபையானது தெய்வீக வல்லமையாகிய பரிசுத்த ஆவியின் மூலமே தேர்வுசெய்யப்பட்டு வருகிறது. இதைக் குறித்து லூக் *24:49* **'என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்"**

ரெபெக்காள் கிறிஸ்துவுக்கென தீர்மானிக்கப்பட்ட மணவாட்டியாகிய சபையைக் குறிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மிகவும் அழகுள்ள கன்னியுமாய் இருந்தாள் என்பது மணவாட்டியின் குணநலன்களையும், அவர்கள் தேவனுடைய பரிசுத்தமான சத்தியத்தின்மேல் வைத்திருக்கும் விசுவாசத்தையும் குறிக்கிறது. 'சீக்கிரமாய் தன் குடத்துத் தண்ணீரைத் தொட்டியிலே ஊற்றிவிட்டு, இன்னும் மொண்டுவரத் துரவண்டையில் ஓடி.. - இது மணவாட்டி சார்ந்தோர் தேவன் பேரிலும், அவருடைய சத்தியத்தின் பேரிலும் அவர்கள் கொண்ட வாஞ்சையும், சத்திய வேலைகளுக்காக அயராது உழைப்பதில் ஆற்றலையும் உற்சாகத்தையும் காட்டுகிறது.

மேலும் கலியாணக் காரியங்கள் நிச்சயிக்கப்பட்ட பின்பும் ரெபெக்காளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. இது தீர்மானிக்கப்பட்ட மணவாட்டி சார்ந்தோர் கிறிஸ்தவ விசுவாசத்திலும், தேவனுடைய ஞானத்திலும் வளர்ந்தபின்பு பெற்றுக்கொள்ளும் பரிசுகளாகும். வெள்ளி நகைகள் தேவனுடைய விலையேறப்பெற்ற சத்தியம் வெள்ளிக்கு ஒப்பாக வசனம் கூறுகிறது ***'கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழுதரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது" (சங் 12:6)*** தேவனுடைய தெய்வீகத்திட்டத்தில் உள்ள சத்தியங்கள் திறக்கப்பட்டு, புரிந்துகொள்ளப்படுகிறது. இதுவே முதலில் பெற்றுக்கொள்ளும் பரிசாகும். பொன் ஆபரணங்கள் இது தெய்வீக சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும் மணவாட்டிக்கு அளிக்கப்பட்ட மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களை குறிக்கும். ***'..திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (2 பேதுரு 1:4)***

குடும்பம் ரெபெக்காளை அழைத்து நீ இந்த மனிதனோடேகூடப் போகிறாயா என்று கேட்டார்கள். அவள் போகிறேன் என்றாள் - இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுகிறிஸ்துவின் மேல் சபை வைத்திருந்த நம்பிக்கை, விசுவாசத்தினை காண்பிக்கிறது. என்ன நேர்ந்தாலும் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற முழுமனதுடன் ஒப்புக்கொடுப்பதை குறிக்கிறது. ரெபெக்காள் தன் வாழ்வைப் பணயம் வைத்து முன்பின் பழக்கம் இல்லாதவரோடு போகத் துணிந்ததுபோல, சபை ஜனங்களும் கண்ணால் காணமுடியாத ஆண்டவர்மேல் நம்பிக்கை கொண்டு, தங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுப்பதைக் குறிக்கிறது.

இங்கு ரெபெக்காள் ஆட்டுக்குட்டியானவரின் மணவாட்டியாக, கர்த்தரோடுகூட மகிமை பெறப்போகின்ற சபையைக் குறிக்கிறாள் என்று நாம் அறிந்திருக்கிறோம். மணவாட்டி இரண்டாம் ஆதாமினுடைய இரண்டாம் ஏவாளாக இருக்கப் போகிறாள் *(1கொரி15:45)* உயிர்த்தெழுதலின் போது கிறிஸ்துவும் சபையும் இணைந்து இவ்வுலகத்திற்கு ஜீவனையும் ஆசீர்வாதத்தையும் அளிப்பார்கள் (வெளி *22:17)*

இந்த உலகில் வாழும் கோடிக்கணக்கான ஜனங்களே ரெபெக்காளின் பிள்ளைகளாகப்போகும் ஜனங்களாவர். "ரெபெக்காளும் அவள் வேலைக்காரிகளும் எழுந்து ஒட்டகங்கள்மேல் ஏறி, அந்த மனிதனோடேகூடப் போனார்கள்" இது மாம்சத்திலிருக்கும் சபையின் பூமிக்குரிய பயணத்தைக் குறிக்கும். பரம கானானை நோக்கின பயணம். ஈசாக்கு சாயங்காலவேளையிலே தியானம் பண்ணப்போயிருந்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்த போது இவைகள் முடிவையும், முதலாம் உயிர்த்தெழுதலின்போது சபையானது தன் ஆண்டவரை சந்திக்கும் நேரத்தையும் குறிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஈசாக்கு தன் மனைவியின் ஆளுகைக் காண, அவள் மூடியிருந்த முக்காட்டை நீக்கவேண்டும். அதுபோல் நம் ஆண்டவரும் நமக்குள்ளே மறைந்திருக்கும் ஆளுகைக் காண விரும்புகிறார். எந்த விதமான ஆளுகைக் காண இயேசு விரும்புகிறார்? 'மயிரைப்பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது". (2 பேதுரு 3:3-4) நமக்குள் மறைந்திருக்கும் பரிசுத்தம், உண்மை ஆகிய குணங்களையே கர்த்தர் எதிர்பார்க்கிறார்.

இது எவ்வாறு கிடைக்கும்? மிகுந்த உபத்திரவங்களினாலும், சுயத்தை வெறுப்பதினாலுமே. இப்படியாக மணவாட்டி எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்பாள் (1தெச 4:17) ஈசாக்கு ரெபெக்காளின் கதை கலியாணத்தில் முடிந்ததுபோல, இயேசு மற்றும் சபையின் கதையும் ஆட்டுக்குட்டியானவரின் பிரமாண்டமான கலியாணத்தில் முடிவடையும்.

கடந்தகால நித்தியத்தில் மனுக்குலத்திற்காக திட்டமிடுபவராகிய தேவன் இதை ஏற்படுத்தினார்.

***நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார். (உபா7:6)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள்பேரில் அன்புவைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை. நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள். (உபா 7:7)***

***நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன். (யோவான் 15:16)***

***பரிசுத்த ஆவியானவர் நம்மை மணவாளன் மேசியாவிற்காக நம்மை ஆயத்தம் பண்ணி, பரிசுத்தம் பண்ணி நடத்திச் செல்கின்றவராக இருக்கின்றார். நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். (யோவான் 16:7-8)***

*மணவாளன் மணவாட்டியைத் தேர்ந்தெடுத்து, அவள் மீது தனது அன்பைக் கொடுப்பது போல அதே வழியில், மேசியா தன் மணவாட்டியைத் தேர்ந்தெடுத்து, அவள் மீது தனது அன்பைக் கொடுக்கிறார்.*

***மணவாட்டியுடன் ஐக்கியம்***

*எதிர்கால மணவாளன் மணமகளை சந்தித்து அவளுடன் ஐக்கியத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். கிறிஸ்து தனது முதல் வருகையில் மனுக்குலத்தோடு தனது நேரத்தை செலவு செய்தார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணவாட்டிக்கான கிரயம் செலுத்தப்படல் (MOHAR)

மணமகளின் வீட்டிலிருந்து வெளியே செல்லும்போது, மணமகன் மணமகளுக்கான கிரயம் செலுத்தி செல்லுதல் வேண்டும். எபிரேயத்தில் "மொஹர்" என்று அழைக்கப்படுகின்றது.

நம்முடைய "மொஹர்" மேசியா இயேசுகிறிஸ்துவினால் சிலுவையின் மேல் ஆணிகளிடிக்கப்பட்டு விலையேறப் பெற்ற இரத்தம் சிந்தப்பட்டு செலுத்தப்பட்டு இருக்கின்றது. இப்படிப்பட்டதான மொஹறினை உலகத்தின் எந்த மணவாளனாலும் செலுத்திவிட முடியாது. உண்மையில் ஜீவனைக் கொடுத்த அன்பு. சிலுவையின் மீது கிறிஸ்துவின் மரணத்தின் மூலம், எல்லா மனுக்குலத்தின் முழுமையான கிரயங்கள் செலுத்தப்பட்டாயிற்று.

இப்படியாக இதை அறியும் மணவாட்டி மணவாளனில் தன் ஜீவனிலும் அதிகமாக அன்பு செலுத்த வேண்டும். காரணம் **1 கொரிந்தியர் 6:20 வசனம் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே. ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள் என்று சொல்லுகின்றது.**

**ஆதலால், பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது. பரலோகத்திலுள்ளவைகளோ இவைகளிலும் விசேஷித்த பலிகளாலே சுத்திகரிக்கப்படவேண்டியதாமே.**

**அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதானஆசாரியன் அந்நிய இரத்தத்தோடே வருஷந்தோறும் பரிசுத்தஸ்தலத்துக்குள் பிரவேசிக்கிறதுபோல, அவர் அநேகந்தரம் தம்மைப் பலியிடும்படிக்குப் பிரவேசிக்கவில்லை.

அப்படியிருந்ததானால், உலகமுண்டானது முதற்கொண்டு அவர் அநேகந்தரம் பாடுபடவேண்டியதாயிருக்குமே. அப்படியல்ல, அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும்பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்.

அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே,

கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார். (எபி 9:23-28).

**மணவாட்டியின் சுத்திகரிப்பு (MIKVAH)**

“மிக்வா” என்பது நீரில் மூழ்குதல் மூலமாக உருவாகும் சுத்திகரிப்பு சடங்கு செயலாகும். மூழ்குதல் பழைய வாழ்க்கையின் வழியிலிருந்து பிரித்தெடுக்கப்படுவதை சுட்டிக்காட்டுகிறது. அப்படியே கலியாணமும் ஒரு பழைய வாழ்க்கையின் வழியிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு புதிய பாதையான உறவுக்குள் செல்லுவதை காண்பிக்கின்றது.

இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான். அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். (ஆதியாகமம் 2:24)

இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரகசியம் பெரியது. நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன். (எபே *5:31*).**

"மிக்வா" ஆவிக்குரிய மறுபிறப்பை எடுத்துச் சொல்கின்றது. பிதாவினால் சீனாய் மலையிலே இஸ்ரவேல் மக்களோடு பண்ணினதான உடன்படிக்கையின் நிச்சயம் அது. எசேக்கியேல் 16 ஆம் அதிகாரத்திலே அங்கே அவர்களை ஒரு மூழ்குதலுக்கான சுத்திகரிப்புக்குள்ளாக கொண்டு செல்லுகின்றார்.

நான் உன் அருகே கடந்துபோனபோது, உன்னைப் பார்த்தேன். இதோ, உன் காலம் பருவகாலமாயிருந்தது. அப்பொழுது என் வஸ்திரத்தை உன்மேல் விரித்து, உன் நிர்வாணத்தை மூடி, உனக்கு ஆணையிட்டுக்கொடுத்து, **உன்னோடு உடன்படிக்கை பண்ணினேன்** என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இவ்விதமாய் நீ **என்னுடையவளானாய்.**

நான் உன்னை **ஜலத்தினால் முழுக்காட்டி,** உன்னை இரத்தமற ஸ்நானம்பண்ணுவித்து, உனக்கு எண்ணெய் பூசி,

சித்திரத்தையலாடையை உனக்கு உடுத்தி, சாயந்தீர்ந்த பாதரட்சைகளை உனக்குத் தரித்து, கட்ட மெல்லிய புடவையையும், மூடிக்கொள்ளப் பட்டுச் சால்வையையும் உனக்குக் கொடுத்து,

உன்னை ஆபரணங்களால் அலங்கரித்து, உன் கைகளிலே கடகங்களையும், உன் கழுத்திலே சரப்பணியையும்போட்டு,

உன் நெற்றியில் நெற்றிப்பட்டத்தையும், உன் காதுகளில் காதணியையும், உன் தலையின்மேல் சிங்காரமான கிரீடத்தையும் தரித்தேன். (எசே *16:8-12*)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளும் அனைவருக்கும் பரிசுத்த ஆவியின் மூலமாக ஞானஸ்நானம் வழங்கப்பட்டு இந்த "மிக்வா" சுத்திகரிப்பு ஜலத்தினாலும் ஆவியினாலும் உண்டாகின்றது.

நான் பேசத்தொடங்கினபோது, பரிசுத்த ஆவியானவர் ஆதியிலே நம்மேல் இறங்கினதுபோல, **அவர்கள்மேலும் இறங்கினார்.**

யோவான் ஜலத்தினாலே ஞாஸ்நானங் கொடுத்தான், நீங்களோ **பரிசுத்தஆவியினாலே** ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன். (அப் *11:15-16*)

**புறப்பட்டுப்போய் மணவாளன் தன்னுடைய மணவாட்டிக்காக அமைக்கும் ஸ்தலம்**


மணவாளன் தனது தகப்பன் வீட்டிற்கு வந்து, தான் புதிதாய் மணம் முடிக்கப்போகும் மணமகளுடன் வாழ எதிர்கால வீட்டைக் கட்டவேண்டும். கிறிஸ்து தனது தகப்பன் வீட்டிற்கு பரமேறிச்சென்று, தனது மணமகளுக்கான இடத்தை ஆயத்தப்படுத்துகிறார்.

**உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக. தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன். *(யோவான் 14:1-3).***


பின்னர் தகப்பனின் வேண்டுகோளுக்கிணங்க, குமாரன் மணமகளின் வீட்டிற்குச்சென்று அவளை அழைத்து வரவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham
noolaham.org | aavana



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகப்பனின் முடிவுக்கு அமைவாகவே மணவாளன் தன்னுடைய மணவாட்டியினை அடைவதற்காக புறப்பட்டு வர வேண்டும். இது கிறிஸ்துவின் மறு வருகை, தனது சபையை தன்னுடன் அழைத்து செல்வதாய் இருக்கும்.

**அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார். அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள். எத்தனிக்கும்போது, தன் ஊழியக்காரருக்கு அதிகாரங்கொடுத்து, அவனவனுக்குத் தன் தன் வேலையையும் நியமித்து, விழித்திருக்கும்படிக்குக் காவல்காக்கிறவனுக்குக் கற்பிப்பான். அப்படியே நீங்களும் விழித்திருங்கள். ஏனெனில், வீட்டெஜமான் சாயங்காலத்திலோ, நடுராத்திரியிலோ, சேவல்கூவும் நேரத்திலோ, காலையிலோ, எப்பொழுது வருவான் என்று நீங்கள் அறியீர்கள். நீங்கள் நினையாதவேளையில் அவன் வந்து, உங்களைத் தூங்குகிறவர்களாகக் கண்டுபிடியாதபடிக்கு விழித்திருங்கள். (மாற்கு 13:32-35)**

**மணவாளனின் வருகை**

**நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று. (மத் 25:6)**

**மணவாளன் எக்காளம் தொனிக்கையிலே தன்னுடைய மணவாட்டிக்காக கடந்து வருவார். இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்தியரையடைவதில்லை. ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.**

**எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும்.***

***அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். (1 கொரி 15:51-58).***

***ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார். அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.***

***பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம். (1 தெச 4:16-17)***

*கிறிஸ்துவின் சரீரம் அவரை ஆகாயத்தில் சந்திக்க எழுந்து, சரீரம் அவரது மணமகள் ஆகிறாள்.*

*மணமகள் தனது வீட்டைவிட்டு சென்று மணமகனை மணந்துகொள்கிறாள். கலியாணம் புனிதமான ஊர்வலம் போன்றதாக நடைபெறும். இந்த காரணத்திற்காக, மணவாளன் முதலில்* **Chuppah** *(கலியாண கூடாரம் அல்லது விரிப்பு) நுழைவார். மணமகன் சப்பாவை நெருங்கி வரும்போது, பாடகர் கோஷ்டிகள், "கர்த்தரின் நாமத்தில் வருகின்றவர் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர்." என்று பாடுவார்கள். இந்த வார்த்தைகள் பேசும் வரை என்னைக் காணாதிருப்பீர்கள் என்று இயேசு கூறினார். (மத் 23:39)*

*மணமகள் தனது கலியாண வஸ்திரங்களை ஆயத்தப்படுத்திக்கொண்டு, மணமகனுக்காய் காத்திருக்கிறாள். மணமகன் தனது மணவாட்டியை கலியாண விருந்திற்காக அலங்கரிக்கிறார். (1*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொரி 3:12-15). கிறிஸ்துவின் மறுவருகைக்காய் காத்திருக்கும் வேளையில், சரீரம் பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்களை உருவாக்கும், சரீரத்திற்குரிய இறுதி அலங்காரம் கிறிஸ்துவின் நியாய சிங்காசனம் முன்பு, கிறிஸ்துவினால் அலங்காரம் செய்யப்படும்.

மணமகனும், மணமகளும் கலியாண விருந்து செய்வர், இவ்விருந்து செல்வந்தர்களாயிருப்பின், ஒருமாதகாலம் நீடிக்கும். கிறிஸ்துவின் கலியாண விருந்து 1,000 ஆண்டுகாலம் நீடிக்கும் அது பூமியில் ஆயிர வருட ஆளுகையில் நிறைவேறும்.

**கலியாண விருந்து**

மணமகனின் தோழர்கள் கலியாண விருந்தில் பங்கேற்பர். பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்து, ஆயிரவருட ஆளுகை விருந்தில் பங்கேற்று ஆனந்திப்பர்.

**மணவாட்டியை உடையவனே மணவாளன். மணவாளனுடைய தோழனோ, அருகே நின்று, அவருடைய சொல்லைக் கேட்கிறவனாய் மணவாளனுடைய சத்தத்தைக்குறித்து மிகவும் சந்தோஷப்படுகிறான். இந்தச் சந்தோஷம் இப்பொழுது எனக்குச் சம்பூரணமாயிற்று. (யோவான் 3:29)**

மணமகளின் தோழர்கள் கலியாண மண்டபத்துக்கு வெளியே எரியும் விளக்குகளுடன், கலியாணத் தம்பதிகள் கலியாண விருந்திற்கு செல்லும் முன்னதாகக் காத்திருப்பர்.

**அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்.**

**அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை.

புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்.

மணவாளன் வரத் தாமதித்தபோது, அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.

நடுராத்திரியிலே: இதோ, மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப் புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

அப்பொழுது, அந்தச் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.

புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சங்கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள்.

புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள்.

அப்படியே அவர்கள் வாங்கிப்போனபோது மணவாளன் வந்துவிட்டார். ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடேகூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது.

பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே, எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள்.

அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள். (மத் 25:1-13).**

மகா உபத்திரவ காலத்துக்குத் தப்பின பரிசுத்தவான்கள் ஆயிரவருட ஆளுகையில் பூமியை நிரப்புவர். ஆட்டுக்குட்டியின் கலியாண விருந்திற்கு அழைக்கப்படாத அவிசுவாசிகள் பூமியிலிருந்து அகற்றப்படுவர்.

கிறிஸ்துவின் முதல் வருகை முதல் அவரது ஆயிர வருட ஆளுகை வரை, வேதாகமத்தில் உள்ள வேதபகுதிகள் அனைத்தும் இஸ்ரவேல் கலியாண வைபவத்தின் ஒற்றுமையை உள்ளடக்கியுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# ஒரு விரல் மணவாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைக்குச் கலியாணத்திற்கு செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள் ஒருவிரல் மணவாட்டி.

பளிச்சிடும் கற்களாலான அலங்கார சுவர்களினால் வானளவு உயர்ந்து இருந்தது கோட்டை. அதற்கு மேல் அலங்காரமே தேவையில்லை என்று சுற்றி நிற்பவர்கள் சொல்லும் வண்ணம் சூரிய வெளிச்சம் பட்டு பட்டு சுவரை மிளிரச் செய்தது. கோட்டையின்மத்தியில் உள்ள மண்டபத்தில் கலியாண நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. கோட்டையே வெளிச்சத்தாலும் மகிழ்ச்சியாலும் நிறைந்திருந்தது.

ராஜாவின் ஒரே மகனின் கலியாண விழா

இளவரசனின் கலியாண வரவேற்பு விழாவிற்கு பட்டணமே காத்திருந்தது. ராஜாவின் சேனைகள் சூழ நின்று இளவரசனுக்காக எக்காளங்களை ஊதி ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தனர். வீதியே கோலாகலமாக காணப்பட்டது. பாதை இருமருங்கிலும் வண்ண வண்ண ஆடையணிந்த இசைக்குழுவினர் இசை முழக்கம் இட்டுக் கொண்டு இருந்தார்கள். பறவைகளும், மிருகங்களும் இளவரசனின் கலியாணத்திற்காக பட்டணமெங்கும் ரம்மியமாக வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

இளவரசன் ராஜாவின் செல்லப்பிள்ளை. ராஜாவுக்கு நித்தம் மனமகிழ்ச்சியாயிருந்து, எப்பொழுதும் ராஜாவின் சமுகத்தில் களிகூருகின்றவர்.

இதோ மணவாட்டிக்காக காத்துக்கொண்டிருந்தார் இளவரசர்.

கோட்டைக்கு புறம்பே கோட்டைக்குச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள் மணவாட்டி. வேக வேகமாக கோட்டைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டாள் மணவாட்டி. அவள் தன்னை உலகத்தின் பேரழகி என்று எண்ணிக் கொண்டிருந்தாள். தான் மணவாளனின் பிரியமான மணவாட்டி என்றும் எண்ணிக் கொண்டிருந்தாள். அவள் யாரைக்குறித்தும் கவலைப்படவில்லை கலியாணத்தின் கோலாகலத்தை மாத்திரம் எண்ணிக்கொண்டிருந்தாள்.

எத்தனையோ நாட்கள், எத்தனையோ வருடங்கள்,

எத்தனையோ தசாப்தங்கள், எத்தனையோ நூற்றாண்டுகள் கடந்து

இதோ உலகம் இளவரசனுக்காக ஆயத்தப்படுத்தி வைத்திருந்த மணவாட்டி, **ஒருவிரல்.**

**ஒருவிரல்** என்னும் மணவாட்டி. இவளுக்கு மற்ற அங்கங்களை குறித்து கவலையில்லை. காரணம் இவளுக்கு அவைகள் தேவையில்லை. இவள் திறமை நிறைந்தவள். அத்திறமையால் ஏகப்பட்ட விரல்களை உருவாக்கி வைத்திருக்கிறாள். இவள் அழகு நிறைந்தவள் தனது தோலை மிகவும் அழகுபடுத்தி வைத்திருக்கிறாள். ஆங்காங்கே கட்டை விரலோடும், சின்னி விரலோடும் பேசிக்கொள்வாள். ஆனால் இவளுக்கு அவைகள் தேவையில்லை.

ஒருவிரல் மணவாட்டி, இளவரசனுக்கு அருகே போகின்றாள். இவள் துண்டாக்கப்பட்டவள். இவள் தன்னைத்தானே வெட்டியவள். இதோ மெதுமெதுவாக இரத்தம் சொட்டத் துவங்குகிறது. ஒருவிரல் மணவாட்டி கலியாணம் நடக்கும் முன்பே மரித்துப் போனாள். ..

சில காலம் சென்ற பின்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைக்குச் கலியாணத்திற்கு செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள் ஒற்றைக் கண் மணவாட்டி.

பிரியமானவர்களே வேதம் சொல்லுகிறது, நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள். (1கொரி-12:27) என்று.

கிறிஸ்து நம்மை சரீரமாகவே அழைத்து இருக்கிறார். ஆனாலும் நாம் தனித்தனியே அவயங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு அவயவமும் சுயநலத்துடன் சுழன்று கொண்டு இருக்கின்றது. ஐக்கியம் என்கின்ற வார்த்தை மிகவும் சுருங்கி போய் ஏனோ தானோ என்கின்றதான ஐக்கியங்கள் ஏராளம்!

அன்பால் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பல சமயங்களில் பிரிவினையின் முதல் அடையாளமாக மாறி காணப்படுகின்றது. பேர் கிறிஸ்தவ சபைகள் மட்டுமின்றி சத்தியத்தில் வேர் கொண்டிருக்கும் சபைகளுக்குள்ளும் பிரிவுகள் ஏற்படுகின்றன என்பதே கசப்பான உண்மை. பல சபைகள் பிரிந்தன என்று அவ்வப்போது கேள்விப்படுகிறோம். நம்முடைய சபையே கூட பிரிந்த அனுபவம் நமக்கு இருக்கலாம். பெருக்கத்தின் நிமித்தம் கிளைகளாக மாறுவது வேறு. ஆனால் கசப்பின் நிமித்தம் பிரிவது வேதனை.

பிரிவு என்பது உலக மக்களாலேயே உகந்தது அல்ல எனக் கருதப்படுவது. ஆனால் திருச்சபையோ சந்தோஷமாக பிரிந்து கொள்ளும். ஊழியர்கள் அதைவிட சந்தோஷமாக பிரிவினைப் படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாம்சீக காரணங்களினால் பிரியும் ஒருவிரல் மணவாட்டி**

1. துன்மார்க்கமான இச்சைகளே பல பிரிவுகளுக்கு காரணம் என யூதா கூறுகிறார் (யூதா 1:18-19) உண்மையில், பல பிரிவுகளுக்கு காரணமாக இருப்பது ஆசையும், பொறாமையும், பெருமையும் தான்.
2. யாக்கோபும் கூட மாம்சீக இச்சைகளே சபைக்குள்ளாக வரும் சண்டைகளுக்கு முக்கிய காரணங்களாக இருக்கின்றன எனக் கூறுகிறார் (யாக் 4:1-2).
3. பண ஆசையே எல்லாத் தீமைக்கும் வேராக இருக்கிறது என்று பவுல் கூறுகிறார் (1 தீமோ 6:10) சபைக்குள்ளாக பிரிவுகள் ஏற்படுவதற்கும் பண ஆசை ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. ஒவ்வொரு சபையும் பணத்தை எவ்வாறு கையாளுவது என்பதை திட்டமிட வேண்டும். இந்த திட்டமிடுதலில் சபையின் ஒவ்வொரு உறுப்பினரின் பங்களிப்பும் முக்கியம்.
4. இச்சை, பதவி மற்றும் மரியாதையினால் உண்டாகும் பிரிவினை.

பிரியமானவர்களே நாம் கிறிஸ்துவுக்குள் திருச்சபையில் ஒரு அங்கமாகவே பிரதானமாக அழைக்கப்பட்டிருக்கிறோமே அன்றி, பதவிகளையும் மரியாதைகளையும் இந்த உலகில் பெறுவதற்காக அல்ல. கிறிஸ்து சொல்லுகிறார் **“உங்களில் பெரியவனாயிருக்கிறவன், ஊழியக்காரனாக இருக்க வேண்டும் என்பதே (மத் 23:11).** சகோதரர்கள் இடையில் பெரியவன் சிறியவன் என்று கிடையாது. அனைவரும் சரி சமமே. இந்த உலகத்தில் நாம் எந்த ஒரு மரியாதையையும் எதிர்பார்ப்பது நமது பலவீனம். நமக்குள் ஏன் மரியாதை கிடைக்காத சமயத்தில் கவலை வருகிறது என்றால், பெருமையே காரணம். இயேசு படாத அவமரியாதைகளா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறை சொல்லும் ஒருவிரல் மணவாட்டி

நாம் அனைத்து சகோதரர்களின் மீதும் ஒரே அளவு அன்பைக் கொண்டிருக்க வேண்டும். சகோதரர்கள் மத்தியில் கும்பல் உருவாகுவது நிச்சயம் தவிர்க்க வேண்டும். தேவன் நம் அனைவர் மீதும் ஒரே அளவு அன்பையே கொண்டிருக்கிறார். அத்தகைய பாரபட்சமற்ற ஆவிக்குரிய அன்பையே நாம் கொண்டிருக்க வேண்டும். புரளிகளை நம்பாமலும், அவற்றை பரப்பாமலும் இருத்தல் வேண்டும். பல சமயங்களில் நம் கண்முன் இல்லாத, நமக்கு அதிக பரிச்சயம் இல்லாத சகோதரர்களைக் குறித்து நமக்கு பரிச்சயமான சகோதரர்கள் தவறான காரியங்களைக் கூறும் பொழுது, நாம் அதை நம்பிவிடுகிறோம். நம் சபையின் மூத்த சகோதரராகவே இருக்கலாம், ஆனால் அவர் வேறு ஒருவரைக் குறித்து தவறான காரியங்களைப் பேசும் பொழுது, அதை அப்படியே நம்பாமல், தீர விசாரித்தே முடிவுக்கு வர வேண்டும்.

அதுமட்டுமின்றி, யாருக்கும் அடுத்தவரைக் குறித்து புறம்பாக பேச அனுமதியில்லை. ஒரு சகோதரரை வீணன் என்றும், முட்டாள் என்றும் கூறுவது நியாயத்தீர்ப்புக்கு வழிவகுக்கும் என்ற எச்சரிப்பை நினைவில் கொள்வோம்

***நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். (மத் 5:22)***

ஒருவேளை ஒரு சகோதரரிடம் குற்றம் காணப்பட்டால், வேறு ஒருவரிடமும் அதனைக் கூறாமல், முதலில் அந்த சகோதரரிடம் தனிமையாக கூற வேண்டும் என்பதே வேதாகமம் கூறுவது. இதற்காக ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறையையே இயேசு கொடுத்திருக்கிறார் அதனைக் கடைப்பிடித்தால், புறம்பாக பேச வாய்ப்பே இருக்காது.

**உன் சகோதரன் உனக்கு. விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடத்தில் போய், நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து. அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக்கொண்டாய். அவன் செவி கொடாமற் போனால், இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிகளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ. அவர்களுக்கும் அவன் செவிகொடாமற்போனால், அதைச் சபைக்குத் தெரியப்படுத்து. சபைக்கும் செவிகொடாதிருப்பானானால், அவன் உனக்கு அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் இருப்பானாக. (மத் *18:15-16*)**

**கசப்புக் கொள்ளும் ஒருவிரல் மணவாட்டி**

சகோதரர்களுக்குள் கசப்பு சில காரணங்களுக்காக வரலாம். அப்பொழுது இயேசு கூறிய வண்ணம், நம் பேரில் எந்த சகோதரருக்கும் கசப்பு அல்லது குறைகள் இருந்தால், அதனை முதலாவதாக சரி செய்யவே முயற்சித்தல் வேண்டும் அந்தக் கசப்பை வளர விடக் கூடாது, தெரிந்தே வளர விட்டால் நியாயத்தீர்ப்புக்குள்ளாவோம் என இயேசு கூறுகிறார்.

**ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன்பேரில் உன் சகோதரனுக்குக் குறைஉண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து. எதிராளி உன்னை நியாயாதிபதியினிடத்தில் ஒப்புக்கொடாமலும், நியாயாதிபதி உன்னைச் சேவகனிடத்தில் ஒப்புக்கொடாமலும், நீ சிறைச்சாலையில் வைக்கப்படாமலும் இருக்கும்படியாக, நீ உன் எதிராளியோடு வழியில் இருக்கும்போதே சீக்கிரமாய் அவனுடனே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்மனம் பொருந்து. பொருந்தாவிட்டால், நீ ஒரு காசும் குறைவின்றிக் கொடுத்துத் தீர்க்குமட்டும் அவ்விடத்திலிருந்து புறப்படமாட்டாய் என்று, மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். (மத் 5:23-26)**

இங்கே, அச்சகோதரருக்கு நம் மேல் இருக்கும் கசப்பு சரியானதா இல்லையா என்பதைக் குறித்து ஆராயச் சொல்லவில்லை. கசப்பு என்று இருந்தாலே அதைச் சரி செய்ய முயற்சிக்க வேண்டும் என்பதே இயேசு கூறுவது. அதே சமயத்தில் காரணம் இல்லாமலும், சிறிய உலகப் பிரகாரமான காரியங்களுக்காவும் கசப்புக் கொள்வதையும் நாம் தவிர்க்க வேண்டும். நியாயமில்லாமல் சகோதரரை கோபித்தால், நியாயத்தீர்ப்புக் குள்ளாவோம் என்பது நிச்சயம்.

## தன்னுடைய தலைவனை தானே தேடிக்கொண்ட ஒருவிரல் மணவாட்டி

கொரிந்து சபையில் பிரிவுகள் இருந்ததற்கு முக்கிய காரணம், அச்சபையின் மக்கள் அப்பொல்லோ, பவுல் என்று தாங்களே தலைவர்களை தேடிக் கொண்டதே (1 கொரி 3:4). பலர் தங்களுக்கு பிடித்த போதகர்களையோ, ஊழியர்களையோ கண்மூடித்தனமாக பின்பற்றுவதால் சபைக்குள்ளாக பிரிவுகள் ஏற்படலாம். பலர் தங்களை சத்தியத்துக்குள்ளாக வழிநடத்திய நபர் மீது வைத்திருக்கும் அளவுகடந்த மரியாதை இந்த கண்மூடித்தனத்திற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. கொரிந்து சபையினர் இவ்வாறே இருந்தனர்

**ஒருவன் நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், வேறொருவன் நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களல்லவா?**

**பவுல் யார்? அப்பொல்லோ யார்? கர்த்தர் அவனவனுக்கு அருள் அளித்தபடியே நீங்கள் விசுவாசிக்கிறதற்கு ஏதுவாயிருந்த ஊழியக்காரர்தானே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார். (1 கொரி 3:4-6)**

நம்மை சத்தியத்துக்குள்ளாக வர வைத்தது தேவனே.

ஆகையால், நம்மை சத்தியத்துக்குள்ளாக வழிநடத்திய ஊழியர் தேவனின் கருவி மட்டும்தான். அவர் மீது நமக்கு அன்பும், மரியாதையும் இருக்கலாம். ஆனால், முன்பார்த்த வண்ணம், எவ்வாறு இறைவன் நம் ஒவ்வொருவர் மீதும் பாரபட்சமின்றி ஒரே அளவு அன்பு வைத்திருக்கிறாரோ அதே போல நாமும் அனைத்து சகோதரர்கள் மீதும் ஒரே அளவு அன்பைக் கொண்டிருக்க வேண்டும்.

கிறிஸ்துவின் பலி மூலம் சாத்தியமான இந்த புனித ஐக்கியத்தை அற்ப காரியங்களுக்காக உடைத்தல் பெரிய குற்றம். கொரிந்து சபையின் பிரிவுகளைக் குறித்து எழுதும் பொழுது என் ஆலயத்தை கெடுப்பவரை நான் கெடுப்பேன் எனத் தேவன் கூறியிருக்கிறார் எனப் பவுல் அவர்களை எச்சரிக்கிறார் (1 கொரி 3:16-17) அந்த எச்சரிப்பு இன்றும் நம்முன் நிற்கிறது. சபையாகிய நாமே அந்த ஆலயம் என்பதை நாம் அறிவோம். ஆகையால் அதிக ஜாக்கிரதையுடன் இருப்போமாக.

தேவபிள்ளைகளே, இயேசு உங்களை மீட்கும் பொருளாக, கிரயமாக, தம்முடைய இரத்தத்தையே ஊற்றிக்கொடுத்திருக்கிறார். ஆகவே நாம் எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்திருந்தாலும், சிலுவையண்டை வந்து நிற்கும்போது, ஒரே குடும்பத்தார் என்பதை உணருகிறோம். ஒரே இரத்தம், நம்மைக் கழுவி அரவணைத்திருக்கிறது. ஒரே ஆவியானவர் நமக்கு உண்டு. ஒரே ஆவியால், நாம் தாகம் தீர்க்கப்பட்டிருக்கிறோம். ஆகவே நாம் கர்த்தருடைய வீட்டார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவனுடைய மாளிகை, அவருடைய மேய்ச்சலின் ஆடுகள், திராட்சச்செடியாகிய அவரில் படரும் கொடிகள்.

சங்கீதக்காரன் சொன்னார், **"இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும், எத்தனை இன்பமுமானது?" (சங். 133:1).** நமக்காக இரத்தம் சிந்தி ஜீவனைக் கொடுத்த இயேசு, இரத்தப் பாசமுள்ள சகோதரன். அவர் நம்மை சகோதரர்கள் என்று சொல்ல அவர் வெட்கப்படவில்லை (எபி. 2:11). ஆம், இயேசுகிறிஸ்து நம்முடைய மூத்த சகோதரன். பரலோகத்திலிருக்கிற பிதாவின் சித்தத்தின் படி செய்கிறவர்களே, இனி நமக்கு சகோதர, சகோதரிகள். சபை கூடி வருவதாலும், சபை ஐக்கியத்திலும் நமக்குக் கிடைக்கிற பெரிய ஆசீர்வாதங்களில் ஒன்று என்றென்றைக்குமுள்ள ஜீவன்.

ஒரு குச்சியை முறித்துவிடலாம். நான்கு குச்சிகள் இணைந்திருக்குமானால், முறிக்க முடியாது. ஒரு மாட்டை சிங்கம் மேற்கொண்டுவிடலாம். ஆனால் நான்கு மாடுகள் சேர்ந்து மேய்ந்தால், சிங்கத்தால் ஒன்றும் செய்ய முடியாது. ஒருவருக் கொருவர் ஜெபிக்க, ஒருவருடைய பாரத்தை ஒருவர் சுமக்க, ஒருவர்மேலுள்ள அனல் மற்றவர்கள்மேல் பற்றியெரிய, சகோதர ஐக்கியமாகிய சபை எவ்வளவு அவசியம்!

***நாம் கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறோம்! (1 கொரி 12)***

**"எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" (1 யோவா. 1:3).**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசாத்துணை**


1. பரிசுத்த வேதாகமம்
2. சொல்லோவிய வேதாகமம், தமிழ் வேதாகமச் சங்கம்
3. Treasury of Scripture Knowledge, Hendrickson Pub; 2nd edition
4. Believers Bible Commentry, William Macdonal
5. The new manners and customs of bible times, Ralph Gower
6. Yeshua: A Guide to the Real Jesus and the Original Church, Ron Moseley
7. விசுவாசிகளின் விளக்கவுரை, வில்லியம் மெக்டோனல்ட்
8. நிறைவாழ்வு ஆய்வு வேதாகமம்
9. இயேசுவின் வருகையும் உலகத்தின் முடிவும், சகோ. தோம்ஸன்
10. கடைசி வெற்றி, சகோ. சகரியா பூணன்
11. இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை, சகோ. வசந்த குமார்
12. இயேசு கிறிஸ்துவின் வருகையும் உலகத்தின் முடிவும், சகோ. மா. ஜான்ராஜ்
13. இறுதிக்கால அடையாளங்களும், இயேசுவின் இரண்டாம் வருகையும், சகோ. அம்புரோஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மணவாளன்

இந்த "மணவாளன்" என்கின்றதான நூலை எங்களது கலியாண தினத்தில் வெளியிடுவதில் **ஓசான்னாவோடு** இணைந்து மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். தேவனுக்கே துதியும், கனமும், மகிமையும் உண்டாகட்டும்.

கலியாணம் என்பது மணவாளனும், மணவாட்டியும் சேருகின்ற உன்னதமான தருணமாக இருக்கின்றது. இக்கலியாணத்தில் மணவாளனாக இயேசுகிறிஸ்துவையும் மணவாட்டியாக திருச்சபையையும் ஒப்பிட்டு வேதாகமம் பேசுவது ஆச்சரியம் நிறைந்த சத்தியமாக இருக்கின்றது.

மணவாட்டி என்கின்றதான திருச்சபை தன்னை எல்லா விதத்திலும் இயேசுகிறிஸ்து என்னும் மணவாளனுக்காக ஆயத்தப்படுத்த வேண்டியதாக இருக்கின்றது. பின்பு இந்த மணவாட்டி மணவாளன் வரும் நாளில் அவரோடு கூட கலியாணத்தின் மூலம் ஐக்கியப்படப் போகின்றது. நாம் மனந்திரும்பி, பாவமன்னிப்பை பெற்று கிறிஸ்துவுக்குள் வாழ்ந்து அவருடைய சரீரமாக மாறும் போது அவருடைய மணவாட்டி என்கின்றதான மகா உன்னதமான தகுதி நமக்கு உண்டாகின்றது. எத்தனை பெரிய பாக்கியம்!

பிரியமானவர்களே இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு நாம் ஆயத்தப்படுவோம்! பிறரையும் ஆயத்தப்படுத்துவோம்!

சகோ. ருஷாந்தன் பெனடிக்,
கிழக்கிலங்கை சுவிசேஷ பணி, மட்டக்களப்பு
07.08.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org